www.nammakalvi.com



உரைநடை உலகம்

# இயல் ஏழு இந்திய தேசிய ராணுவத்தில் தமிழர் பங்கு

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **இந்திய தேசிய இராணுவம் ………… இன் தலைமையில் ………… உருவாக்கினர்.**

அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர். ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்.
இ) மோகன்சிங், ஜப்பானியர். ஈ) மோகன்சிங், இந்தியர்.

**விடை: இ) மோகன்சிங், ஜப்பானியர்.**

2. **கூற்று : இந்திய தேசிய இராணுவப் படைத்தலைவராக இருந்த தில்லான், 'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்.**

**காரணம் : இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.**

அ) கூற்று சரி, காரணம் சரி. ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று தவறு, காரணம் தவறு.

**விடை: அ) கூற்று சரி, காரணம் சரி.**

### குறுவினா

1. **இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?**

- கேப்டன் தாசன்
- அப்துல் காதர்
- சிதம்பரம்
- லோகநாதன்
- ஜானகி
- இராஜாமணி
- கேப்டன் லட்சுமி
- இராமு

2. **தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?**

நான் இராணுவப் பணியை தாய்நாட்டுக்காக உழைக்க தேர்ந்தெடுப்பேன். ஏனெனில், தாய்நாட்டைப் பாதுகாக்கவும், இந்திய ஒருமைப்பாட்டையும் இறையாண்மையைப் பேணவும் கிடைத்த வாய்ப்பாக இராணுவப் பணியைக் கருதுகிறேன்.

3. **'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?**

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க, ஜெர்மனியில் இருந்து சிங்கப்பூர் வந்தார். 1943-ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் நாள் பொறுப்பை ஏற்கும்போது 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' (டெல்லி சலோ) எனப் போர் முழக்கம் செய்தார்.

## சிறுவினா

**1. குறிப்பு வரைக: டோக்கியோ கேடட்ஸ்.**

- இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பப்பட்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.
- இரண்டாம் உலகப் போர்ச்சூழலில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் பர்மாவில் இருந்து காட்டு வழியாகப் பயணம் செய்து சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து, படகு வழியாகத் தப்பி, கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து 45 பேரும் ஜப்பானின் கியூசு தீவை அடைந்து பயிற்சி பெற்றனர்.
- பனிபடர்ந்த மைதானத்தில் காலை 5 மணிக்கு குளிர் ஜீரோ (சுழியம்) டிகிரிக்கும் கீழ் இருக்கும் நிலையில் சிறப்புப் பயிற்சிகள் பெற்றனர். இவர்களே டோக்கியோ கேடட்ஸ் என்று அழைக்கப்பட்டனர்.

**2. பனியிலும், மலையிலும் எல்லையைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.**

இந்தியா - பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு இருக்கும் ஜம்மு-காஷ்மீரில் உள்ள ஒரு பகுதி கார்கில். ஸ்ரீநகரையும் லே நகரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ள பகுதி. பனிபடர்ந்த இமயமலைப் பகுதி எப்பொழுதும் குளிர் சுழியத்திற்கு (−) கீழ்தான் இருக்கும்.

1999ஆம் ஆண்டு குளிர்காலத்தில் −20° குளிர்நிலவிய நிலையில் இந்திய இராணுவம் படைகளை மலை உச்சியில் இருந்து கீழே இறக்கியது. இந்தச் சூழலில் பாகிஸ்தான் இராணுவத்தினர் கார்கிலில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி ஊடுருவினர். மாடு மேய்ப்போர் பாகிஸ்தான் இராணுவத்தினரைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து இந்திய ராணுவ கேப்டன் சவுரப் காலியாவிடம் தெரிவித்தனர். இந்திய தரைப்படை, கப்பல் படை, விமானப்படை அசுரவேக தாக்குதலைத் தொடுத்தது. பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்திற்கு சரக்கு கப்பல்கள் செல்ல முடியாதபடி நடுக்கடலில் தடுத்து இந்திய கடற்படை.

போர் விமானங்களும் குண்டுகளை வீசின. மிக் 27, மிக் 21, எம்.ஐ. 17 ஆகிய 3 விமானங்களை இந்தியா இழந்தது. பாகிஸ்தான் ராணுவ வீரர்களில் 4000 பேரும் இந்திய தரப்பில் 527 பேரும் பலியானார்கள். போர் முடிவில் கார்கில் பகுதியில் இருந்து பாகிஸ்தான் ராணுவம் பின்வாங்கியது. போர் முடிவுக்கு வந்த ஜூலை 26 கார்கில் போர் வெற்றி தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சி.ஆர்.பி.எப் வீரர்களால் தான் நாம் நிம்மதியாக உறங்க முடிகிறது. பேரிடர் காலங்களில் நிலைமையைச் சமாளிக்க முடிகிறது.

## நெடுவினா

**1. இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.**

**முன்னுரை:**

இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும். இந்த அமைப்பின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள் எனில் மிகையாகாது.

www.nammakalvi.com



நேதாஜி அவர்களுடன் இணைந்து இந்திய தேசிய இராணுவப் படையில் போராடிய தமிழர்களின் பங்கு வியந்து போற்றத்தக்கது.

### தூண்கள்:

1943ம் ஆண்டு, நேதாஜி "டெல்லி சலோ" என்ற முழக்கத்தை முன் வைத்தார். இவரின் முழக்கம் அனைவரின் மனதிலும் பசுமரத்தாணி போல பதிந்தது. இந்திய தேசிய இராணுவப்படை, பிரித்தானிய அரசை எதிர்த்த போது தமிழகத்தில் இருந்து பெரும்படையைத் திரட்டி, இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுசேர்த்த பெருமைக்குரிய தமிழர் 'பசும்பொன் முத்துராமலிங்கதேவர்' ஆவார்.

பசும்பொன் அவர்களின் தலைமையில் இருந்த தமிழர்களின் பணியைக்கண்டு வியந்த தில்லான் என்பவர், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள் தான்" என்றார். அனைவரும் பாராட்டும் விதத்தில் இந்திய தேசிய இராணுவத்தைத் தாங்கும் தூண்களாகத் தமிழர்கள் திகழ்ந்தனர்.

### இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள்:

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி என்ற தமிழ்ப்பெண் ஆவார். இப்படையில் தமிழ் பெண்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். இதில் தலைசிறந்த பெண்தலைவர்களான ஜானகி, இராஜாமணி போன்றோர் வீரமிக்க தமிழ் பெண்களே ஆவர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசிலும் கேப்டன் லட்சுமி இன்றியமையாப் பொறுப்பு வகித்து பணியாற்றி இந்திய தேசிய இராணுவத்தின் தூணாக இருந்தார் எனில் மிகையாகாது.

### இரண்டாம் உலகப்போரில் தமிழர்:

இரண்டாம் உலகப்போரின் போது தமிழ் மக்களை வைத்துப்போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார்.

"தமிழர்களின் இரத்தம் நேதாஜி மூளையில் கட்டியாக உள்ளது" என்றார் சர்ச்சில், அதற்கு பதில் அளித்த நேதாஜி, "இந்தத் தமிழினம் தான் ஆங்கிலேயரை அழிக்கும் என்றார்.

### மரணம் பெரிதன்று:

1943–45 ஆம் ஆண்டுகளில் பதினெட்டு தமிழ் இளைஞர்கள் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டனர். தூக்கில் உயிரை விடும்பொழுது கூட தமிழ் இளைஞர்கள், "வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர் நீத்த முழுநிலவினைப்போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்" என்று கூறி இன்முகத்துடன் உயிர் நீத்தனர்.

### நேதாஜியின் பாராட்டு:

இராணுவத்தில் தமிழர்கள் ஆற்றிய பணியையும் செய்த தியாகங்களையும் கண்டு வியந்த நேதாஜி, "நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்திய தமிழனாகப் பிறக்க வேண்டும்" என்றாராம். நேதாஜியே வியந்து பாராட்டும் வண்ணம் நம் தமிழரின் இராணுவப்பணி அமைந்திருந்தது.

### முடிவுரை:

தாயக நலனுக்காக தம் இன்னுயிரை ஈந்த நம் தமிழர்களின் வீரம் போற்றுதலுக்குரியது. தம் இன்னுயிரைத் தியாகம் செய்த முகம் தெரியாத வீரத்தமிழர்களின் அர்ப்பணிப்பு உணர்வையும், அஞ்சாத வீரத்தையும், நாட்டுப்பற்றையும், என்றென்றும் போற்றுவதோடு, இராணுவ வீரர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் மதித்துக்காப்பதும், பெற்ற சுதந்திரத்தைப் பேணுவதும், பயங்கரவாத சக்திகளைத் தடுப்பதும் நம் கடமைகளாகும்.

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற ஆண்டு ......**

அ) 1948 ஆ) 1932 இ) 1942 ஈ) 1952

**விடை : இ) 1942**

**2. இந்திய தேசிய இராணுவத்தில் ....... பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது.**

அ) முத்துலட்சுமி ஆ) நீலாம்பிகை இ) வள்ளியம்மை ஈ) ஜான்சிராணி

**விடை : ஆ) ஜான்சிராணி**

**3. தமிழ் மக்கள் துணையுடன் போராடிய நேதாஜியைக் கண்டு கோபம் கொண்ட ஆங்கிலப் பிரதமர் .....**

அ) சர்ச்சில் ஆ) கிளமண்ட் அட்லி

இ) ஸ்டான்லி பால்குவின் ஈ) மெக்டொனால்டு

**விடை : அ) சர்ச்சில்**

**4. இந்திய தேசிய இராணுவம் மணிப்பூர் பகுதியில் கொடியேற்றிய இடம் ......**

அ) இம்பால் ஆ) நம்போல் இ) மொய்ராங் ஈ) அன்ரோ

**விடை : இ) மொய்ராங்**

## குறுவினா

**1. இந்திய தேசிய இராணுவத்தில் மகளிர் படை குறித்து எழுதுக.**

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி என்ற தமிழ்ப்பெண் ஆவார். இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். இதில் தலைசிறந்த பெண்தலைவர்களான ஜானகி, இராஜாமணி போன்றோர் வீரமிக்க தமிழ்ப் பெண்களே ஆவர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசிலும் கேப்டன் லட்சுமி இன்றியமையாப் பொறுப்பு வகித்து பணியாற்றி இந்திய தேசிய இராணுவத்தின் தூணாக இருந்தார் எனில் மிகையாகாது.

**2. மரண தண்டனை பெற்ற அப்துல் காதரின் கருத்து யாது?**

1943-45 ஆம் ஆண்டுகளில் பதினெட்டு தமிழ் இளைஞர்கள் ஆங்கில அரசை எதிர்த்த இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியதால் தூக்கிலிடப்பட்டனர். தூக்கில் உயிரை விடும்பொழுது கூட தமிழ் இளைஞர்கள், 'வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர் நீத்த முழுநிலவினைப்போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்' என்று கூறி இன்முகத்துடன் உயிர் நீத்தனர்.

**3. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பொன்மொழிகள் யாவை?**

அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப்பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.

www.nammakalvi.com



**4. மனதை மலர வைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா?**

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும், சுதந்திரத்தினால் உண்டாகும் மனநிறைவும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு. அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும்தான்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 185

**1. நீங்கள் நாட்டிற்கு உங்கள் பங்கினை அளிக்க விரும்புகிறீர்களா? இந்திய இராணுவத்தில் சேருவதற்கான தகுதி அவர்களுக்கான பணிகள் குறித்த கருத்துகளைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.**

### கலந்துரையாடல்

**கலந்துரையாடுபவர்கள் : ஆசிரியர், மணிமாறன், மதிமாறன், எழில் ஆகியோர்.**

மணிமாறன் : ஐயா! இந்திய தேசிய ராணுவத்தில் தமிழர் பங்கு என்ற இக்கட்டுரையைப் படித்தவுடன், எனக்கும் இராணுவத்தில் சேர ஆசையாக உள்ளது.

மதிமாறன் : எனக்கும் தான் ஐயா!

எழில் : ஐயா! எனக்கும்தான்! பெண்களும் சேரலாம் தானே ஐயா!

ஆசிரியர் : எல்லோருமே சேரலாம் எழில்..

மணி : ஐயா! அதற்கான வழிமுறைகள் தகுதிகள் என்ன ஐயா...

ஆசிரியர் : பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
(இது குறைந்தபட்ச கல்வித்தகுதி) கல்வித் தகுதிக்கு ஏற்ப பணிகள் உண்டு.

மதிமாறன் : ஐயா... உடல் தகுதிகள் பற்றி

மணிமாறன் : நன்கு உயரமாக வேண்டுமா?ஐயா!

ஆசிரியர் : 157.5 செ மீ உயரம் இருக்க வேண்டும். எந்த வகையான உடற்கோளாறும் இருக்கக்கூடாது.

எழில் : ஐயா பெண்களுக்கு...

ஆசிரியர் : பெண்கள் இராணுவத்தில் சேர 'வுமன் என்ட்ரி' உள்ளது. அதன் மூலம் சேரலாம்.

மதிமாறன் : ஏதாவது தேர்வு எழுத வேண்டுமா?

ஆசிரியர் : ஆமாம் மாறா! என். டி. ஒ. எனப்படும் தேர்வு எழுத வேண்டும்.

மணிமாறன் : எப்போது தேர்வு நடக்கும் ஐயா!

ஆசிரியர் : ஏப்ரல் செப்டம்பர் ஆகிய மாதங்களில் ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெறும்.

எழில் : ஐயா! தேர்வில் தேர்ச்சியடைந்தால் உடனே சேர்ந்து விடலாமா?ஐயா.

ஆசிரியர் : தேர்ச்சி பெற்றபின், ஓராண்டு இராணுவப் பயிற்சி தொழில்நுட்ப பயிற்சி 3 ஆண்டுகள் பணி வழங்கப்பட்ட பின் ஓர் ஆண்டு பயிற்சி என ஐந்து ஆண்டுகள் பயிற்சியளிக்கப்பட்டு முறைப்படி இராணுவப் பணியில் சேர்க்கப்படுவர்.

மதிமாறன் : இராணுவ வீரர்களின் பணிகள் என்னென்ன ஐயா!

www.nammakalvi.com



**ஆசிரியர் :** நாட்டையும், மக்களையும் காப்பது, எல்லைக் கண்காணிப்பு பயங்கரவாத எதிர்ப்புப்பணி, அரசு விழாக்களுக்கு பாதுகாப்பு, அவசர காலங்களில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்ட உதவுதல், இயற்கை சீற்றங்களின் போது மீட்புப் பணி மற்றும் நிர்மாணிப்புப் பணிகள் மலைப்பகுதி, காடுகளில் கட்டுமான பணிகள். இவ்வாறு ராணுவ வீரர்கள் செய்யும் பணிகள் பலவாகும்.

**மணிமாறன் :** ஐயா! கேட்க கேட்க எனக்கும் அதில் இணைய வேண்டும் என்ற ஆவல் மிக்கெழுகிறது ஐயா!

**எழில் :** வணக்கத்துக்கும், பாராட்டுக்கும் உரிய தியாகப்பணியாம் ராணுவப் பணியில் நானும் என்னை அதில் இணைத்துக் கொள்வேன் ஐயா.


**மதிமாறன் :** ஐயா! உங்கள் விளக்கம் எங்கள் ஐயங்களைப் போக்கியதோடு எங்கள் மனதில் நாட்டுப்பற்றையும் ஊட்டி விட்டது.

**மூவரும் :** நன்றி ஐயா!

**2. எனக்குப் பிடித்த விடுதலை போராட்ட வீரர் என்ற தலைப்பில் அவர் தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் காலக்கோட்டில் உருவாக்குக**

எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் “சுப்பிரமணிய சிவா” அவரது வாழ்க்கை நிகழ்வுகளைக் குறிக்கும் காலக்கோடு.

**சுப்பிரமணிய சிவா**



www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

இயல் ஏழு

# சீவக சிந்தாமணி

## நுழையும் முன்

- சங்க இலக்கியங்கள் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்தவை.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறக்கருத்துக்களைக் கூறுபவை.
- பின்னர்தான் ஒப்பிலா தலைவன் ஒருவனது வாழ்க்கையைப் பாடும் காவியங்கள் மலர்ந்தன.
- இவ்வகையில் சீவகனை ஒப்பிலாத் தலைவனாகக் கொண்டு தோன்றிய காப்பியமே "சீவக சிந்தாமணி" ஆகும்.
- இன்பங்களைத் துறந்து துறவு பூண வேண்டும் என்பதே இக் காப்பியத்தின் மையக்கருத்து.
- ஏமாங்கத நாட்டின் வளத்தைத் திருத்தக்கதேவர் வருணிக்கும் பகுதியே நம் பாடப் பகுதி.

## நூல்குறிப்பு (நூல் வெளி)

- சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை ஐம்பெருங் காப்பியங்கள் ஆகும்.
- ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றே சீவக சிந்தாமணி ஆகும்.
- இந்நூல் விருத்தப் பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் ஆகும்.
- இந்நூல் 'சீவகன்' என்னும் அரசனின் வரலாற்றை விரித்துக் கூறுவதால் சீவக சிந்தாமணி எனப் பெயர் பெற்றது.
- சீவகன் எட்டுப் பெண்களை மணந்து இன்புற்று வாழ்ந்த மண நிகழ்ச்சியைச் சுவைபட விளக்குவதால் 'மணநூல்' என்றும் பெயர் பெற்றது.
- சீவக சிந்தாமணியில் 3,147 பாடல்கள் உள்ளன.
- காந்தருவதத்தை இலம்பகம் முதல் 'முக்தி இலம்பகம்' முடிய 13 இலம்பகங்கள் உள்ளன.
- இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும், தெளிவாய் விளக்குகிறது.
- இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, இன்பம் நிலையாமை முதலான நிலையாமைகளை நெஞ்சில் நிற்கும் வண்ணம் நயம்பட எடுத்துரைக்கிறது.
- நிலையான இன்பம் இறைவனின் பாதமாகிய வீடுபேறே என்பதை நிறைவாக இந்நூல் உணர்த்துகிறது.
- தமிழ் மொழிக்கு இலியட்டும் இதுவே, ஒடிசியும் இதுவே என ஜி.யு போப் அவர்கள் இந்நூலைப் பாராட்டுகிறார்.

www.nammakalvi.com



### ஆசிரியர் குறிப்பு

- இந்நூலின் ஆசிரியர் திருத்தக்கதேவர் ஆவார்.
- திருத்தக்க தேவர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
- சமண சமயத்தைச் சார்ந்தவர்.
- இவருக்குத் திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர், திருத்தக்க மகா முனிகள், தேவர் என வேறு பெயர்களும் உண்டு.
- துறவியர்க்கும் இன்பச்சுவை மிக்க இலக்கியம் இயற்ற முடியும் என்று நிறுவும் வகையில் இக்காப்பியத்தை (சீவகசிந்தாமணியை) இயற்றினார்.
- சீவகசிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக இவர் பாடிய நூல் “நரி விருத்தம்” ஆகும்.
- “நாமகள் இலம்பகத்தில்” நாட்டு வளம் பகுதியில் அமைந்துள்ள “ஏமாங்கத நாட்டின் வளம்” கூறுவதே நம் பாடப் பகுதியாகும்.

## ஏமாங்கத நாட்டின் வளம்

### 1. பார் போற்றும் ஏமாங்கதம்

தென்னை மரத்திலிருந்து நன்கு முற்றிய தேங்காய் விழுகின்றது. அந்தத் தேங்காய் அருகில் உள்ள பாக்கு மரத்தின் உச்சியில் வேகமாய் விழ, அந்த வேகத்தில் பாக்கு மரத்தின் உச்சியில் உள்ள சுவைமிக்க தேனடையைக் கிழித்து, அருகில் இருக்கும் பலாமரத்தில் உள்ள பலாப்பழத்தைப் பிளந்து அதில் தேன் சிந்த வைத்து, பலாமரத்தின் பக்கத்தில் உள்ள மாமரத்தின் இனிமையான மாங்கனியைச் சிதற வைத்து தேங்காய், தேனடை, பலா, மாங்கனிகள் எல்லாம் அருகில் உள்ள வாழை மரத்தின் வாழைப்பழங்களை, உதிரச் செய்ததாம். இத்தகு வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டின் புகழானது உலகின் பல திசைகளிலும் பரவி இருந்தது.

### சொல்லும் பொருளும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெங்கு | – | தேங்காய் | கீறி | – | கிழித்து |
| கமுகின் நெற்றி | – | பாக்கு மரத்தின் உச்சி | வருக்கை | – | பலாப்பழம் |
| தீந்தேன் தொடை | – | இனிமையான தேனடை | இசையால் | – | புகழால் |

### 2. வாரி வழங்கும் வள்ளல்

இல்லையென்று வருந்தி வந்து இரந்து கேட்பவர்க்கு இல்லை என்று சொல்லாது வாரிவழங்கும் செல்வர்களைப் போல (வள்ளல்களைப் போல) வள்ளல் தன்மை வாய்ந்தது ஏமாங்கத நாட்டில் பாயும் வெள்ளம்.

ஏமாங்கத நாட்டில் பாய்ந்தோடி வரும் வெள்ளமானது, உயர்ந்த மலைச் சிகரங்களில் உள்ள செல்வக் குவியல்களைத் தன்னகத்தே சேர்த்துக் கொண்டு வந்து ஊக்கமில்லாத மக்களுக்கும் வாரி வழங்கும் வள்ளல் போல,

உழைக்கும் உள்ளம் இலா ஊக்கமில்லா மக்களுக்கு ஊர்தோறும் தான் கொண்டுவந்த செல்வத்தை வழங்கும் வகையில் ஏமாங்கத நாட்டினுள் விரைந்து பாய்கிறது.

www.nammakalvi.com



**சொல்லும் பொருளும்:**

| | | |
|---|---|---|
| வள்ளல் கைத்தல மாந்தரின் | – | வாரி வழங்கும் வள்ளல்களாம் செல்வர்கள் |
| மால்வரை | – | பெரிய மலை உச்சி |
| கொழு நிதி குப்பை | – | திரண்ட நிதி குவியல் (செல்வக்குவியல்) |
| உள்ளம் இல்லவர் | – | ஊக்கம் இல்லாதவர் |
| உய்த்து உராய் | – | வழங்கும் பொருட்டு |
| மடுத்து | – | பாய்ந்து |

## 3. மணம் கமழும் கழனி

ஏமாங்கத நாட்டில் நீர்வளம் நிறைந்த வயல் பகுதிகள் நிறைந்து காணப்படுகின்றன. அவ்வயல் பகுதிகளில் நேரிய அழகான கொம்புகளையுடைய ஆண் எருமைகளும், நீண்ட நேரான கொம்புகளை உடைய வலிமை வாய்ந்த எருதுகளும் தண்ணீரில் நடப்பதும், உழுவதும், விடுவதுமான ஒலியானது சிலம்பப் பண் போல பேரொலியாகக் கேட்கின்றது.

அவ்வொலி கேட்டு, வயல்வெளிகளில் நீந்தி மகிழும் புள்ளிகளையும், வரிகளையும் உடைய வரால் மீன்கள் கலைந்து ஓடுகின்றன.

கழனியின் மணமும், எருதும் எருமையும் கலைப்பதால் எழும் சேற்றின் மணமும், துள்ளித்திரியும் வரால் மீனின் மணமும் வீசும், வயல்வெளிகளில் உழவர்கள் கூட்டம் வெள்ளம் போல் எங்கும் நிறைந்திருந்தன.

**சொல்லும் பொருளும்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெறி மருப்பு | – | அழகான கொம்பு | இரிய | – | அஞ்சியோட |
| செறி மருப்பு | – | சிறந்த நேரான கொம்பு | வெறி கமழ் | – | மணம் வீசுகின்ற |
| ஏற்றினம் | – | எருது இனம் (காளை) | கழனி | – | வயல் வெளி |
| சிலம்பப் பண் | – | சிலம்பின் ஒலி | உழுநர் | – | உழவர்கள் |
| வராலினம் | – | வரால் என்னும் மீன் வகை | | | |

## 4. தலை வணங்கிய நெற்பயிர்

தனக்குள் கதிர்பிடித்து நிற்கும் நெற்பயிர்கள் கருக்கொண்ட பச்சைப் பாம்பு போல் தோற்றம் கொண்டுள்ளன.

நெற்பயிர்கள் கதிர் விட்டு நிமிர்ந்து நிற்கும் காட்சியானது, செல்வம் மிகுதியாகப் பெற்ற செல்வந்தர்கள், செல்வச் செருக்கால் பக்குவம் இல்லாதவர்களாய் ஆணவத்தில் தலை நிமிர்ந்து நிற்பது போல் காட்சியளிக்கிறது.

நாட்கள் சென்றன, நெற்பயிர்களில் உள்ள நெற்கதிர்கள் முற்றியவுடன், தலை சாய்ந்து நிற்கின்றன. தலை சாய்ந்து நிற்கும் நெற்பயிர்களானது, தெளிந்த நூல்களைக் கற்ற நல்லோர் தலை சாய்ந்து பணிந்து நிற்றலைப் போல காட்சியளிக்கிறது.

**சொல்லும் பொருளும்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூல் பசும் பாம்பு | – | கருக்கொண்ட பச்சைப் பாம்பு | தேர்ந்த நூல் | – | அறிவைத் தெளிவு படுத்தும் நூல் |
| மேலலார் | – | மனப்பக்குவம் இல்லார் | இறைஞ்சி | – | பணிந்து |
| தலைநிறுவி | – | தலை நிமிர்ந்து (செருக்கால்) | | | |

www.nammakalvi.com



## 5. ஆயிரம் ஆயிரமாய்

வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில், நாள்தோறும் ஆயிரம் வகையான சுவைமிக்க உணவுகள் கிடைக்கின்றன.

நாடி வருவோர்க்கும், பசியால் வாடுவோர்க்கும் உணவளிக்கும் அறச்சாலைகள் ஆயிரமாயிரமாய் இருக்கின்றன.

அழகுமிகு மகளிர், தங்கள் அழகினை மேலும் மெருகூட்ட, ஒப்பனை செய்து கொள்ள மணி மாடங்கள் ஆயிரமாயிரமாய் இருக்கின்றன.

ஊக்கத்துடன் உழைக்கும் செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத தொழில் வல்லுநர் (கம்மியர்) ஆயிரமாயிரம் பேர் உள்ளனர்.

அதனால், விழாக்களும், திருமண நிகழ்வுகளும், மங்கல நிகழ்வுகளும் ஆயிரமாயிரமாய் நடக்கின்றன.

ஏமாங்கத நாட்டிலே இல்லாதனவே இல்லை என்னும் வகையில் ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் குறைவின்றி நிகழ்கின்றன. அதனால் மக்களும் குறைவிலா மகிழ்வுடனும், ஆரவாரத்துடனும் வாழ்கின்றனர்.

### சொல்லும் பொருளும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அடிசில் | – | உணவு (சோறு) | செய்கோலம் | – | ஒப்பனை செய்தல் |
| வைகல் | – | நாள்தோறும் | மடிவுஇல் | – | சோம்பல் இல்லாத |
| அறப்புரம் | – | அறச்சாலைகள் | ஒடிவு இலை | – | இல்லாதன இல்லை |
| கொடியன்னார் | – | கொடி போன்ற மெல்லிய மகளிர் | மங்கலம் ஆயிரம் | – | திருமணம், விழா போன்ற மங்கல நிகழ்வுகள் |

## 6. நாடுகள் சூழ்ந்த ஏமாங்கதம்

ஏமாங்கத நாடு, உண்மையான நேரிய தவம் புரிவோர்க்கும், முனிவர்க்கும் மட்டுமின்றி, நல்லறமாம் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகத் திகழ்கின்றது.

நிலையான மெய்ப் பொருளைத் தேடுவோர்க்கும், நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாகும்.

வளம் மிகு நாடுகள் சூழ்ந்த எழிலும், வளமும் நிறைந்த சிறப்புப் பொருந்திய ஏமாங்கத நாடு வானுலகம் வழங்கும் இன்பமானது, வெற்றியை விரும்பும் உலகோர் ஏற்கும் வண்ணம் தானே தாழ்ந்து உவந்து இம் மண்ணுலகிற்கு வந்தது போல் அனைத்து இன்பங்களும் நிறைந்த நாடுகளை எல்லையாகக் கொண்டது ஏமாங்கத நாடு.

### சொல்லும் பொருளும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நற்றவம் | – | உண்மையான தவம் | வீழ்ந்தென | – | தாழ்ந்து வருதல் |
| நற்பொருள் | – | மெய்ப்பொருள் | வட்டம் | – | எல்லை |
| வெற்ற | – | வெற்றி | மற்றநாடு | – | பிறநாடுகள் |
| உவந்து | – | மகிழ்ந்து | | | |

www.nammakalvi.com



**இலக்கணக் குறிப்புகள்:**

| | | | |
|---|---|---|---|
| செந்நெல் | – பண்புத்தொகை | தேர்ந்த | – பெயரெச்சம் |
| தண்கடல் | – பண்புத்தொகை | இறைஞ்சி | – வினையெச்சம் |
| நற்றவம் | – பண்புத்தொகை | உறீஇ | – சொல்லிசை அளபெடை |
| விளைக | – வியங்கோள் வினைமுற்று | செய்கோலம் | – வினைத்தொகை |
| தேமாங்கனி | - உவமைத் தொகை | கொடியனார் | - இடைக்குறை |

**பகுபத உறுப்பிலக்கணம்:**

**இறைஞ்சி – இறைஞ்சு + இ**

இறைஞ்சு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

**ஈன்று – ஈன் + ற் + உ**

ஈன் – பகுதி
ற் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**ஓம்புவார் – ஓம்பு + வ் +ஆர்**

ஓம்பு – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
ஆர் பலர்பால் வினைமுற்று விகுதி

**விளைக – விளை + க**

விளை – பகுதி
க – வியங்கோள் வினைமுற்று விகுதி

**கீறி – கீறு + இ**

கீறு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?**

அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.
ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்.
இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்.
ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.

**விடை : அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.**

### குறுவினா

**1. கருக்கொண்ட பச்சைப்பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?**

கருக்கொண்ட பச்சைப்பாம்பு நெற்பயிர்கள் தோற்றத்திற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

www.nammakalvi.com



## சிறுவினா

**1. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?**

- வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டில் உள்ள ஊர்களில் நாள்தோறும் ஆயிரம் வகையான உணவுகள் இருக்கும்.
- பசி என்று வருவோருக்கும், நாடி வருவோருக்கும் அறச்சாலைகள் ஆயிரம் இருக்கின்றன.
- மகளிர் தம்மை ஒப்பனை செய்ய மணிமாடங்கள் ஆயிரம் இருக்கின்றன.
- செய்தொழிலில் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரமாயிரமாய் இருக்கின்றனர்.
- ஏமாங்கத நாட்டிலே இல்லாதவை இல்லை என்னும் வகையில் ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் குறைவின்றி நிகழ்கின்றன.

## நெடுவினா

**1. ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.**

**முன்னுரை:**

சீவகசிந்தாமணியில் "நாமகள் இலம்பகத்தில்" நாட்டு வளம் என்னும் பகுதியில் ஏமாங்கத நாட்டின் வளம், திருத்தக்கதேவரால் நயம்பட உரைக்கப்பட்டுள்ளது. ஏமாங்கதநாட்டு வளம் போலவே எம் ஊரின் வளங்களும் உள்ளன எனில் மிகையாகாது.

**வளம் மிக்க நெருங்கிய தோப்புகள்:**

ஏமாங்கத நாட்டில் நிகழ்ந்த வளமான நிகழ்வு போலவே எம் ஊரிலும் அடர்ந்த தோப்புகளில் நிகழ்ந்தது.

தென்னை மரத்திலிருந்து முற்றிய தேங்காய் விழுகின்றது. அத்தேங்காய் நிலத்தை வந்தடையும்முன் விழும்வேகத்தில் அருகிருந்த பாக்கு மரத்தின் உச்சியின் உள்ள தேனடையைக் கிழித்து, தேனடையோடு பலாமரத்தில் உள்ள பலாப்பழத்தினை பிளந்து, தேங்காய், தேனடை, பலாச்சுளைகளோடு, வாழைப்பழங்களையும் உதிரச்செய்கிறது. இவ்வாறு ஏமாங்கத நாட்டை போலவே எம் ஊரும் முக்கனி வளமும், தென்னை மரங்களும், பாக்கு மரங்களும் நிறைந்தனவாய்க் காணப்படுகின்றது.

**மண்வீசும் வயல்வளம்:**

ஏமாங்கத நாட்டைப்போலவே, நீர்நிலைகள் சூழ்ந்த வயல் பகுதிகள் உள்ளன. அந்நீர்நிலைகளில் அழகான கொம்புகளையுடைய ஆண் எருமைகளும், வலிமையான நேரிய கொம்புகளை உடைய எருதுகளும் பேரொலி எழுப்பி நீந்துகின்றன. அவ்வொலியால் அந்நீர்நிலையில் உள்ள பொறிகளையுடைய வரால் மீன் இனங்கள் கலைந்து ஒடுகின்றன. இவ்வாறு எருமைகளும், எருதுகளும், நீரைக் கலக்குவதாலும், சேறுமணமும், நீந்தும் மீன் மணமும் கலந்த வயல்பகுதிகளில் வெள்ளமென உழவர்கள் உழுதிருந்தனர்.

**இறைஞ்சி வணங்கும் நெற்பயிர்கள்:**

கருக்கொண்ட பச்சைப்பாம்பைப்போல நெற்பயிர்கள் திரட்சியான தோற்றம் கொண்டுள்ளன. செல்வம் பெற்று பக்குவம் இல்லாது செருக்குடன் இருக்கும் மேல் அல்லார் போல, கதிர்விட்டு நிமிர்ந்துநிற்கின்றன நெற்பயிர்கள்.

www.nammakalvi.com



அப்பயிர்களில் உள்ள நெற்கதிர்கள் முற்றியவுடன், தெளிந்த நூல் பல கற்றோரின் பணிவைப்போல பணிந்து, இறைஞ்சி தலைசாய்ந்து நிற்கும் கவின் மிகு காட்சியையும் எம் ஊரில் காணலாம்.

**ஆயிரம் விழாக்கள்:**

வளம்மிக்க எம் ஊரில் ஆயிரம் வகையான உணவு உண்டு. பசியுடன் நாடி வருவோருக்கு உணவு வழங்கும் அறச்சாலைகள் ஆயிரம் உண்டு. மகளிர் ஒப்பனை செய்துகொள்ளும் மணிமாடங்கள் ஆயிரம் உண்டு. சோம்பல் இன்றி தொழில் புரியும் கம்மியர்களும் ஆயிரக்கணக்கானோர் உண்டு. அதனால் திருமணங்களும், விழாக்களும் ஆயிரமாயிரமாய் நடைபெறுகின்றன.

**முடிவுரை:**

இவ்வாறு ஏமாங்கத நாட்டின் வளம் போலவே, வளமும்;, சிறப்பும் கொண்டனவாய் எம் ஊரும் உள்ளது என்பதில் பெருமிதமும் மகிழ்வும் கொள்கிறேன்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **இன்பங்களைத்துய்த்து துறவு பூண வேண்டும் என்னும் கருத்து அமைந்த காப்பியம் எது?**
   அ) சிலப்பதிகாரம் ஆ) வளையாபதி இ) குண்டலகேசி ஈ) சீவகசிந்தாமணி
   **விடை : ஈ) சீவகசிந்தாமணி**

2. **சீவகசிந்தாமணிக்குரிய மற்றொரு பெயர் யாது?**
   அ) மனநூல் ஆ) மணநூல் இ) மங்கல நூல் ஈ) சமண நூல்
   **விடை : ஆ) மணநூல்**

3. **சீவகசிந்தாமணியின் இலம்பகங்கள் எத்தனை?**
   அ) பதினான்கு ஆ) பதினைந்து இ) பதினாறு ஈ) பதின்மூன்று
   **விடை : ஈ) பதின்மூன்று**

4. **சீவகசிந்தாமணியை இயற்றியவர் யார்?**
   அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைசாத்தனார்
   இ) திருத்தக்கத்தேவர் ஈ) கணிமேதாவியர் **விடை : இ) திருத்தக்கத்தேவர்**

5. **சீவசிந்தாமணிக்கு முன்னோட்டமாக திருத்தக்கத்தேவர் பாடிய நூல் யாது?**
   அ) நரிவெண்பா ஆ) நரிவிருத்தம் இ) சிந்தாமணிமாலை ஈ) காவடிச்சிந்து
   **விடை : ஆ) நரிவிருத்தம்**

6. **“ஏமாங்கத நாட்டு வளம்” அமைந்த இலம்பகம் எது?**
   அ) விமலையார் ஆ) சுரமஞ்சரி இ) காந்தருவதத்தை ஈ) நாமகள்
   **விடை : ஈ) நாமகள்**

www.nammakalvi.com



**7. திருத்தக்கத்தேவர் பின்பற்றிய சமயம் எது?**

அ) பௌத்தம் ஆ) சமணம் இ) வைணவம் ஈ) சைவம்

**விடை : ஆ) சமணம்**

**8. பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) தெங்கு | – | பலாப்பழம் |
| ஆ) வருக்கை | – | தேங்காய் |
| இ) கழனி | – | சோறு |
| ஈ) அடிசில் | – | வயல் |

**விடை:**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) தெங்கு | – | தேங்காய் |
| ஆ) வருக்கை | – | பலாப்பழம் |
| இ) கழனி | – | வயல் |
| ஈ) அடிசில் | – | சோறு |

**9. <u>நெறி</u> மருப்பு எருமை – வெறி <u>கமழ்</u> கழனி இத்தொடரின் கோடிட்ட சொற்களின் பொருள் யாது?**

அ) கொம்பு, மணம் ஆ) வயல், மலை

இ) தேங்காய், புகழ் ஈ) சோறு, எல்லை

**விடை: அ) கொம்பு, மணம்**

**10. வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக் கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை என்னும் அடிகளில் இடம் பெற்றுள்ள நயம் __________.**

அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) அந்தாதி

**விடை: அ) எதுகை**

**11. ஐம்பெருங்காப்பியத்தில் இடம் பெறாத நூல் __________.**

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவக சிந்தாமணி ஈ) நீலகேசி

**விடை: ஈ) நீலகேசி**

**12 வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் நாள்தோறும்__________ வகையான உணவுகள் கிடைக்கின்றன.**

அ) பத்து ஆ) நூறு இ) பல ஈ) ஆயிரம்

**விடை: ஈ) ஆயிரம்**

**13. ஏமராங்கத நாட்டிலுள்ள மணிமாடங்களின் எண்ணிக்கை __________.**

அ) நூறு ஆ) ஆயிரம் இ) இரண்டாயிரம் ஈ) இருநூறு

**விடை: ஆ) ஆயிரம்**

**14. சீவகசிந்தாமணியின் நாமகள் சிலம்பத்தில் __________ என்னும் பகுதி நம் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.**

அ) நாட்டு வளம் ஆ) காட்டு வளம் இ) ஆற்று வளம் ஈ) இயற்கை வளம்

**விடை: அ) நாட்டு வளம்**

**15. திருத்தக்கத்தேவரின் காலம் __________.**

அ) எட்டாம் நூற்றாண்டு ஆ) ஒன்பதாம் நூற்றாண்டு

இ) ஆறாம் நூற்றாண்டு ஈ) ஏழாம் நூற்றாண்டு

**விடை: ஆ) ஒன்பதாம் நூற்றாண்டு**

www.nammakalvi.com



**16. விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் ________.**

அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி

**விடை: இ) சீவகசிந்தாமணி**

## குறுவினா

**1. வரால் மீன்கள் கலைந்து ஓடுவதற்கான காரணம் யாது?**

அழகான கொம்புகளை உடைய ஆண் எருமைகளும் நேரான கொம்புகளையுடைய வலிமையான எருதுகளும் பேரொலி எழுப்புவதைக் கேட்டுப் புள்ளிகளும், வரிகளும் உடைய வரால் மீன்கள் கலைந்து ஓடுகின்றன.

**2. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது எதனைப் போன்றது?**

நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, செல்வம் பெற்ற பக்குவம் இல்லாதவர் தலை நிமிர்ந்து நிற்பது போன்றதாகும்.

**3. பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது எதனைப் போன்றது?**

தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப் போன்றதாகும்.

**4. ஏமாங்கத நாடு எவர்க்கெல்லாம் இனிய இடமாகத் திழக்கிறது?**

ஏமாங்கத நாடு, உண்மையான தவம் புரிவோர்க்கும் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகத் திகழ்கிறது.

**5. எவற்றைத் தேடுவோர்க்கு உகந்த இடமாக ஏமாங்கத நாடு விளங்குகிறது?**

நிலையான பொருளைத் தேடுவோர்க்கும் நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாக ஏமாங்கத நாடு விளங்குகிறது.

## சிறுவினா

**1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவகசிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

**2. சீவகசிந்தாமணி குறிப்பு வரைக.**

- சீவகசிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் ஆகும்
- இந்நூலில் இலம்பகம் என்னும் உட்பிரிவு காணப்படுகிறது.
- இந்நூல் மொத்தம் பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டது.
- இதற்கு மணநூல் என்று மற்றொரு பெயரும் உண்டு.
- திருத்தக்கதேவரால் இயற்றப்பட்ட நூல்,

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

பக்கம்: 188

**1. அருகிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் குறிப்பெடுத்து ஓவியம் தீட்டுக.**



- நான் வசிக்கும் இடத்தின் அருகில், ஒரு குளம் இருக்கின்றது.
- குளத்தைச் சுற்றிலும் வயல் வெளிகள் உள்ளன.
- குளத்தின் கரையில் ஓர் ஆலமரம் உள்ளது.
- பறவைகளும், கிளிகளும் அதில் வசித்து மகிழ்கின்றன. பறவைகள் தன் குஞ்சுகளுக்கு உணவளிக்கும் காட்சி மனதை மயக்கும்.
- வயல் வெளிகளில் கூட்டமாய் உழவர்கள் வேலை செய்யும் போது ஆரவாரம் காணப்படும்.
- மாலை நேரத்தில் மயிலும் தோகை விரித்து ஆடும்.

**2. உங்கள் பள்ளி வேரூன்றிய நாள் தொடங்கி வளர்ந்த வரலாற்றையும், அதன் சிறப்புகளையும் கட்டுரையாக்குக.**

### எங்கள் பள்ளி

முன்னுரை : நான் பயிலும் பள்ளி. அரசு மேல்நிலைப் பள்ளி ஆகும். அன்ன சத்திரம் ஆயிரம், ஆலயங்கள் பல்லாயிரம் கட்டுவதைக் காட்டிலும் ஏழைக்கு எழுத்தறிவித்தலே கோடி புண்ணியங்களைக் கொண்டு வந்து சேர்க்கும் அல்லவா! எழுத்தறிவு கொடுத்துக் கொண்டிருக்கும் அறிவுத் திருக்கோவில் எம் பள்ளி.

தோற்றம் : எங்கள் பள்ளி அப்போதைய ஆங்கில அரசால் 1918 ம் ஆண்டு ஒன்று முதல் எட்டு வரை உள்ள நடுநிலைப் பள்ளியாகத் தோன்றி வேரூன்றி வளர ஆரம்பித்தது.

வளர்ச்சி : பின்னர் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்ந்தது. பின் 1978 இல் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு, இன்று கம்பீரமாக நகரின் மையத்தில் உள்ளது.

சாதனைகள் : இந்த ஆண்டு எம் பள்ளி நூற்றாண்டு விழா காண இருக்கின்றது. பல அறிஞர்களை, விற்பனர்களை, சமூக சேவகர்களை, ஊருக்கு உழைக்கும் உத்தமர்களை, மருத்துவர்களை, பொறியாளர்களை, வழக்குரைஞர்களை, அறிஞர்களை, அரசியல்வாதிகளை உருவாக்கி நல்லறிவு புகட்டி, வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவுக் கோயிலாகத் திகழ்கிறது.

முடிவுரை : பல்துறைகளிலும் முத்திரை பதிக்க பலருக்கும் வழிகாட்டிய அறிவுப் பெட்டகமாகவும், பலருடைய வாழ்வை உயரத்திற்குக் கொண்டு சென்ற ஏணியாகவும் இன்று வரை திகழ்கிறது. பல தலைமுறை கண்ட எம் பள்ளி, இன்னும் பல புதிய தலைமுறைகளை உருவாக்க வாழ்த்தி வணங்குகிறேன்.

www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

# இயல் ஏழு

# முத்தொள்ளாயிரம்

**நுழையும் முன்:**

- ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர். பிற்கால காப்பியங்களில் நாட்டுவளம் தவறாது இடம் பெற்றது. முத்தொள்ளாயிரம் என்னும் இந்நூல்.
- சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப் படுத்துகிறது.

**நூல் குறிப்பு:**

சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவகைப்பகுப்பில் ஒவ்வொருவரைப் பற்றியும் 300 பாடல்கள் வீதம், மொத்தம் 3 x 300 = 900 பாடல்கள் பாடப்பட்டதால் முத்தொள்ளாயிரம் எனப்பட்டது.

**நூலின் உள்ளடக்கம்:**

புகழ், திறை, நாடு, கொடை, கைக்கிளை, யானைமறம் எனப் பல தலைப்புகளில் மூவேந்தர்க்கும் பாடிய பாடல்கள் உள்ளடக்கமாய் உள்ளன.

**நூலின் மரபு குறிப்பு:**

- முத்தொள்ளாயிரம் தொல்காப்பியர் குறிப்பிடும் "விருந்து" என்னும் வனப்பு வகையைச் சார்ந்தது.
- 900 பாடல்களில் தற்பொழுது 130 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
- வெண்பாவால் எழுதப்பட்ட நூல் இது.
- மன்னர்களின் பெயரைக் குறிப்பிடாமல் சேரன், சோழன், பாண்டியன் என்று பொதுவாகவே பாடுகிறது.
- இந்நூலின் 108 பாடல்கள் புறத்திரட்டு என்னும் நூலில் இருந்து கிடைத்துள்ளன.
- அவை முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.
- இந்நூலின் ஆசிரியர் யார் என அறிய முடியவில்லை.
- இந்நூலை இயற்றியவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**இந்நூல்.....**

- சேர நாட்டை – அச்சம் இல்லாத நாடாகவும்
- சோழநாட்டை – ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உள்ள நாடாகவும்
- பாண்டிய நாட்டை – முத்துடைய நாடாகவும் சிறப்பித்துக் காட்டுகிறது.

**சேர நாடு:**

- சேரநாட்டின் வளத்தினையும், மக்களின் அச்சமற்ற வாழ்வினையும் இப்பாடல் ஒருசேர புகழ்கின்றது.
- சேறு நிறைந்த பொய்கைகளும், நீர்வளம் மிக்க வயல்களும் சேரநாட்டில் மிகுதி.

www.nammakalvi.com



- சேறுபட்ட, நீர்வளம் மிகுந்த வயல் பகுதிகளிலும், பொய்கைகளிலும் அரக்கு நிறம் கொண்ட செவ்வாம்பல் (செவ்வல்லி) மலர்கள் மெல்ல தன் வாயவிழ்ந்து விரிந்தன.
- அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்து விட்டது என எண்ணின.
- தன் குஞ்சுகளைத் தீயிலிருந்து காப்பாற்ற நினைத்துத் தம் கைகளான சிறகுகளைப் படபடவென அடித்து அவற்றை அணைத்துக்கொண்டன.
- இந்தப் பறவைகளின் ஆரவாரம் தவிர, மக்கள் துயர மிகுதியால் செய்யும் ஆரவாரத்தைச் சேரநாட்டில் காண இயலாது என்கிறார் புலவர்.
- இதற்குக் காரணம் கூறுவார் போல் "நச்சிலை வேல் கோக்கோதை" என்று மன்னனைக் குறிப்பிடுகிறார்.
- சேரன் ஏந்திய வேல் நஞ்சு பூசப்பட்டிருப்பது. எனவே பகைவர் அவன் மேல் பேரச்சம் கொண்டுள்ளனர் என்பது குறிப்பு.

**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| அள்ளல் | – சேறு | கைச்சிறகு | – சிறகுகளாகிய கைகள் |
| பழனம் | – நீர்மிக்க வயல் | பார்ப்பு | – குஞ்சு |
| வாயவிழ | – மொட்டவிழ்ந்து விரிதல் | ஒடுக்கும் | – பாதுகாக்கும் |
| வெரீஇ | – அஞ்சி [பயந்து] | கவ்வை | – ஒலி |
| புள்ளினம் | – பறவை இனம் | | |

**சோழ நாடு:**

- இப்பாடல் சோழநாட்டின் ஏர்க்களச் சிறப்பையும், போர்க்களச் சிறப்பையும் எடுத்துக் கூறுகிறது.
- சோழநாடு "ஏர்" க்கும் "போர்" க்கும் புகழ் பெற்றது.
- வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போரின் மீது ஏறி நின்று கொண்டு அருகில் உள்ள வயல்களில் இருக்கும் உழவர்களைப் பார்த்து "நாவலோ" என்று கூவி அழைப்பர்.
- "நாவலோ" என்பதற்கு "இந்த நாள் வாழ்க, சிறக்க" என்பது பொருள். இவ்வாறு உழவர்கள் செய்யும் செயலானது,
- போர்க்களத்திலே போர்வீரர்கள் வலிமையான கொல்யானை மீது ஏறி நின்று கொண்டு, மற்ற வீரர்களை "நாவலோ" என்று அழைக்கும் ஒலியைப் போன்று விளங்கியதாக இப்பாடலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.
- போர் வீரர்கள் அவ்வாறு எழுப்பிய ஒலி வாழ்த்தொலி போல் அன்றி இயமனின் ஒலியைப் போல் விளங்கியது என்று ஆசிரியர் குறிப்பால் உணர்த்துவது மூலம் சோழநாட்டின் படைவீரர்களின் வலிமையை இப்பாடல் தெளிவுறுத்துகின்றது. இத்தகு வளமும் வீரமும் மிக்கது சோழ நாடு.

**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| நாவலோ | – 'நாள் வாழ்க' என்பது போன்ற வாழ்த்து | | |
| ஓதை | – ஒலி | கூற்று | – எமன் [இயமன்] |
| இசைத்தால் | – ஆரவாரத்தோடு கூவுதல் | கிள்ளி | – சோழன் |

www.nammakalvi.com



**பாண்டிய நாடு:**

- “பாண்டியநாடு முத்துடைத்து” பாண்டிய நாட்டில் எங்கு நோக்கினும் எதை நோக்கினும் முத்துக்களாகவே காட்சியளிக்கிறது என்பதை இப்பாடல் விளக்குகிறது
- வெண்கொற்றக் குடையையுடைய தென்னவனாகிய பாண்டியனுடைய ஒளி பொருந்திய முத்துடைய நாட்டின்கண்,
- வெண்சங்குகள் மணலில் ஈனுகின்ற முதிராத முட்டைகளும் (இளஞ்சினை) புன்னை மரத்தில் தரையில் உதிர்ந்து கிடக்கும் குவிந்த புன்னை அரும்புகளும் (மொட்டுகளும்)முத்துக்கள் குவிந்து கிடப்பது போல் காணப்படுகின்றன.
- பந்தலைப் போன்ற பரந்து விரிந்துள்ள இளம்பாக்கு மரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகளும் முத்துக்கள் போன்று தோன்றும் அழகான தன்மையுடையது பாண்டிய நாடு.
- இயற்கை வருணனைகள் பிற உயிரினங்கள் மூலம் பாண்டிய நாட்டின் வளத்தை ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| நந்தின் | – சங்கின் | கமுகு | – பாக்கு (மரம்) |
| இளைஞ்சினை | – முதிராத முட்டை | முத்தம் | – முத்து |
| புன்னை | – புன்னை மரம் | தென்னன் | – பாண்டியன் |
| பந்தர் | – பந்தல் அமைத்தது போல் | நகை முத்த | – ஒளிபொருந்திய முத்து |

**இலக்கணக் குறிப்பு:**

| | | | |
|---|---|---|---|
| அஞ்சி | – பெயரெச்சம் | குவிமொட்டு | – வினைத்தொகை |
| வெண்குடை | – பண்புத்தொகை | வெரீஇ | – சொல்லிசையளபெடை |
| இளங்கமுகு | – பண்புத்தொகை | பந்தர் | – ஈற்றுப் போலி |
| கொல்யானை | – வினைத்தொகை | மற்றே | – உவம உருபு |

**பகுபத உறுப்பிலக்கணம்:**

**கொண்ட – கொள்(ண்) + ட் + அ**

| | |
|---|---|
| **கொள்** | – பகுதி, ‘ள்’(ண்) ஆனது விகாரம் |
| **ட்** | – இறந்தகால இடைநிலை |
| **அ** | – பெயரெச்ச விகுதி |

**சிந்தி – சிந்து + இ**

| | |
|---|---|
| **சிந்து** | – பகுதி, |
| **இ** | – வினையெச்ச விகுதி |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) பண்புத் தொகை, வினைத்தொகை

இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்

**விடை: ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை**

www.nammakalvi.com



**2. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?**

அ) வருக்கை – இருக்கை ஆ) புள் – தாவரம்
இ) அள்ளல் – சேறு ஈ) மடிவு – தொடக்கம்

**விடை : இ) அள்ளல் – சேறு**

**3. நச்சிலைவேல் கோக் கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே**

அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு
இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

**விடை : இ) சேர நாடு, சோழ நாடு**

## குறுவினா

**1. அள்ளல் பழனத்து அரக்காம்பால் வாயவிழ இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?**

- அள்ளல் – சேறு
- பழனம் – வயல்

## சிறுவினா

**1. சேர, சோழ, பாண்டி நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.**

**சேரநாடு:**

சேறுபட்ட நீர்வளம் மிகுந்த வயல்பகுதிகளில் அரக்கு நிறம்கொண்ட செவ்வாம்பல் மலர்கள் மெல்ல தம் வாயவிழ்ந்து விரிந்தன. அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்தது என எண்ணி தம் தமது கைகளான சிறகுகளைப் படபடவென அடித்து, தம் குஞ்சுகளைத் தீயினின்று காப்பாற்றும் பொருட்டு அணைத்துக்கொண்டன. இப்பறவைகளின் இத்தகு ஆரவாரம் தவிர, மக்கள் துயரமிகுதியால் செய்யும் ஆரவாரத்தைச் சேரநாட்டில் காண இயலாது.

**சோழநாடு:**

சோழநாடு ஏர்க்களச்சிறப்பையும், போர்க்களச் சிறப்பையும் கொண்டிருந்தது. வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போரின் மீது ஏறி நி;ன்று கொண்டு அருகில் இருக்கும் உழவர்களைப் பார்த்து "நாவலோ" என்று கூவி அழைப்பர் நாவலோ "இந்நாள் வாழ்க சிறக்க" என்று பொருள்) இவ்வாறு வயல் வளம் மிகுந்ததாகக் காணப்பட்டது சோழநாடாகும்.

**பாண்டியநாடு:**

வெண்கொற்றக்குடையை உடைய தென்னவனாகிய பாண்டியனுடைய ஒளி பொருந்திய நாட்டின்கண் எங்கு நோக்கினும் முத்துக்குவியலே காணப்பட்டது. வெண்சங்குகள் மணலில் ஈனுகின்ற இளஞ்சினையும், குவிந்துகிடக்கின்ற புன்னை மரத்தின் அரும்புகளும், பாக்கு மரங்களின் பாளைகளில் இருந்து சிந்திய மணிகளும் முத்துக்குவியல்களைப்போலவே காட்சியளித்தன என்று முத்தொள்ளாயிரம் மூன்று நாடுகளின் வளங்களையும் எடுத்துக் கூறுகிறது.

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **அச்சமில்லாத நாடாக முத்தொள்ளாயிரம் எந்நாட்டைக் கூறுகிறது?**

அ) சோழநாடு ஆ) சேரநாடு இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு

**விடை: ஆ) சேரநாடு**

2. **'நாள்வாழ்க' என்னும் வாழ்த்துப்பொருளை உணர்த்தும் சொல் யாது?**

அ) காவலோ ஆ) நாவலோ இ) பந்தரோ ஈ) நச்சிலையோ

**விடை: ஆ) நாவலோ**

3. **"கொல் யானை மேலிருந்து" இத்தொடரில் கொல்யானை என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?**

அ) பண்புத்தொகை ஆ) உரிச்சொற்றொடர்

இ) உருவகம் ஈ) வினைத்தொகை **விடை: ஈ) வினைத்தொகை**

4. **பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) நந்து | – | முத்து |
| ஆ) முத்தம் | – | குஞ்சு |
| இ) பழனம் | – | சங்கு |
| ஈ) பார்ப்பு | – | வயல் |

**விடை**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) நந்து | – | சங்கு |
| ஆ) முத்தம் | – | முத்து |
| இ) பழனம் | – | வயல் |
| ஈ) பார்ப்பு | – | குஞ்சு |

5. **பொருத்திக்காட்டுக.**

அ) கோதை – 1. சோழர்
ஆ) கிள்ளி – 2. பாண்டியர்
இ) தென்னன் – 3. சேரர்

அ) 3, 1, 2 ஆ) 1, 2, 3 இ) 3, 2, 1 ஈ) 2, 3, 1

**விடை : அ) 3, 1, 2**

6. **கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே நல்யானைக் கோக்கிள்ளி நாடு அடிகளில் இடம் பெறும் அணி ..............**

அ) உவமை ஆ) உருவகம் இ) பிறிதுமெறுதல் ஈ) வேற்றுமை

**விடை: அ) உவமை**

7. **முத்தொள்ளாயிரத்தின் பா ...............**

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

**விடை: அ) வெண்பா**

8. **புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ள முத்தொள்ளாயிரத்தின் செய்யுள்கள் ...............**

அ) 106 ஆ) 108 இ) 110 ஈ) 112

**விடை: ஆ) 108**

www.nammakalvi.com



9. **முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் ...............**

அ) நக்கீரர் ஆ) பரணர் இ) கபிலர் ஈ) அறிய முடியவில்லை

**விடை: ஈ) அறிய முடியவில்லை**

10. **முத்தொள்ளாயிரம் ஆசிரியரின் காலம் ...............**

அ) முன்றாம் நூற்றாண்டு ஆ) நான்காம் நூற்றாண்டு
இ) ஐந்தாம் நூற்றாண்டு ஈ) ஆறாம் நூற்றாண்டு

**விடை: இ) ஐந்தாம் நூற்றாண்டு**

11. **பொருத்திக்காட்டுக.**

அ) சேர நாடு – 1. ஏர்க்களச் சிறப்பு
ஆ) சோழ நாடு – 2. அச்சமில்லாத நாடு
இ) பாண்டிய நாடு – 3. முத்துடை நாடு

அ) 2, 1, 3 ஆ) 1, 2, 3 இ) 3, 2, 1 ஈ) 2, 3, 1

**விடை : அ) 2, 1, 3**

## குறுவினா

1. **சோழ நாட்டின் சிறப்புகளாக முத்தொள்ளாயிரச் செய்யுளில் கூறப்படுவன யாவை?**

ஏர்க்களச் சிறப்பு, போர்க்களச் சிறப்பு.

2. **நீர்ப்பறவைகள் அஞ்சி தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டதற்காண காரணம் யாது?**

சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் மெல்ல விரிந்ததைக் கண்டு தண்ணீரில் தீப்பிடித்துவிட்டதாக அஞ்சி தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் நீர்ப்பறவைகள் ஒடுக்கி வைத்துக் கொண்டன.

3. **‘நாவலோ’ என்று கூவி அழைப்பவர் யார்?**

நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று கொண்டு மற்ற உழவர்களை ‘நாவலோ’ என்று கூவி அழைப்பர்.

4. **முத்தொள்ளாயிரத்தில் பாடப்பெறும் மன்னர்களைக் குறிப்பிடுக.**

சேர, சோழ, பாண்டியர்.

5. **அஞ்சி, வெண்குடை – இச்சொற்களுக்கான இலக்கணக் குறிப்பை எழுது.**

அஞ்சி – பெயரெச்சம், வெண்குடை – பண்புத்தொகை.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 190

1. **நீங்கள் வசிக்கும் பகுதி, வேந்தருள் யார் ஆண்ட நாடு, என்பதை அறிந்து அவர்களைப் பற்றிய செய்தித்தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.**

நாங்கள் வசிக்கும் பகுதி நெல்லை மாவட்டத்தில் உள்ள தென்காசி என்னும் ஊர் ஆகும்.

தென்காசியை தலைநகராக்கி அங்கேயே முடிசூட்டிக் கொண்ட மன்னன் “சடையவர்மன் பராக்கிரம பாண்டியன்” ஆவார். சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் முதல் அவனின் அடுத்த

www.nammakalvi.com



தலைமுறையில் வந்த அனைத்துப் பாண்டியரும் தென்காசியையே தலைநகராகக் கொண்டு தென்காசி பெரிய கோயிலில் உள்ள சிவந்த பாதவூருடைய ஆதீன மடத்தில் முடிசூட்டிக் கொண்டனர்.

தென்காசி பெரியகோயில் பிரம்மதேசம், சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம், களக்காடு ஆகிய ஊர்களில் இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் காணப்படுகின்றன.

தென்காசிப் பகுதியை ஆண்ட பாண்டியர்களில் "கொல்லங்கொண்டான்" என்பவனே பாண்டியர் வரலாற்றில் அறியப்படும் கடைசி பாண்டிய மன்னனாவான். தென்காசியில் பாண்டிய மன்னர்களின் ஆளுகை 17ம் நூற்றாண்டின் இறுதி வரை நடைபெற்றது அறியப்படுகிறது.

தென்காசி கோவிலில் உள்ள இவனது மெய்க்கீர்த்தி "பூமிசைவளிதை நாவினில் பொலிய" எனத் தொடங்குகிறது. பொன்னி பெருமான், மானக்கவசன் போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்த இம்மன்னன் புலமை மிக்கவனாகவும் வடமொழி அறிந்தவனாகவும் விளங்கினான். திருக்குற்றாலத்தில் சேர மன்னன் ஒருவனுடன் போர்புரிந்து வெற்றி பெற்றான்.



## ஆற்றிய அறப்பணிகள்:

- ஐந்து ஊர்களில் அக்கரகாரம் அமைத்து அந்தணர்களுக்குத் தானம் வழங்கினான்.
- திருக்குற்றாலம், திருப்புடைமருதூரில் உள்ள சிவாலயங்களுக்கு மண்டபங்கள் அமைத்தான்.
- நெல்லை சிவன் கோவிலின் நள்ளிரவு வழிபாட்டிற்காக நிவந்தங்கள் அளித்தான்.
- செங்கோல் ஆட்சி நடத்திய சடையவர்மன் விசுவநாதப் பேரேரி என்ற பெயருடன் ஒரு ஏரியை அமைத்தான்.
- இவ்வாறு எங்கள் ஊரை ஆண்ட பாண்டிய வேந்தனின் பெருமைகளை எழுதிக்கொண்டே போகலாம். எம் ஊரில் வசிப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

www.nammakalvi.com



2. நெல் விதைப்பு முதல் அரிசி புடைப்பது வரை, வயல்களக்காட்சியை அறிந்து தகுந்த படங்களுடன் காட்சிப்படுத்துக.



உழுதல்



விதைத்தல், நடுதல்



உரமிடுதல்



களையெடுத்தல்



தலை சாய்த்து நிற்கும் நெற்பயிர்கள்



வயல்வெளி



அறுவடை செய்தல்



போர் அடித்தல்



மூட்டைகளில் நெல் அளந்து கட்டுதல்



அரிசியாக்குதல்



அரிசி புடைத்தல்

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



கவிதைப் பேழை

# இயல் ஏழு மதுரைக்காஞ்சி

- பதினெண்மேற்கணக்கு நூல்களில் மதுரைக்காஞ்சி முதன்மையானது.
- இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை, கொத்தளம், திருவிழாக்கள், பல்வகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விவரிக்கப்பட்டுள்ளது.

## நூல் குறிப்பு (நூல் வெளி):

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக் காஞ்சி. காஞ்சி என்பதற்கு "நிலையாமை" என்று பொருள்.
- மதுரையின் சிறப்புகளையும், நிலையாமைத் தத்துவத்தையும் மையமாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளதால் மதுரைக்காஞ்சி எனப் பெயர் பெற்றது.
- இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. 354 அடிகள் மதுரையைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுகின்றன.
- இந்நூலைப் "பெருகுவலி மதுரைக் காஞ்சி" என்று வேறு பெயரிட்டும் அழைப்பர்.
- இந்நூலின் பாட்டுடைத்தலைவன் "தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்" ஆவார்.
- பத்துப்பாட்டுகளுள் மிகுதியான அடிகளை உடைய நூல் மதுரைக்காஞ்சியே ஆகும்.
- "முடிசார்ந்த மன்னரும் முடிவில்<br>பிடி சாம்பல் ஆவார்"<br>என்ற நிலையாமை தத்துவத்தைக் கூறி, மன்னனை வீடு பேற்றின் நிமித்தம் நெறிப்படுத்திய நூல் ஆகும்.

## ஆசிரியர் குறிப்பு:

மதுரைக் காஞ்சியை இயற்றியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டம் "மாங்குடி" என்னும் ஊரில் பிறந்தவர். இவர் "மதுரைக் காஞ்சிப்புலவர்" என்றும். "காஞ்சிப்புலவனார்" என்றும் சிறப்பிக்கப்பட்டார். எட்டுத்தொகையிலும் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

அவை

| | |
|---|---|
| அகநானூறு - 1 (89 வது பாடல்) | குறுந்தொகை - 3 (164,173,302)" |
| நற்றிணை - (2) (120,123)" | புறநானூறு - 6 (24, 26,313,335,372,396) |

ஆகியவற்றைப் பாடியுள்ளார்.

www.nammakalvi.com



### பாடலின் பொருள்:

- மதுரை மாநகரிலே ஆழமான, தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது.
- பழமையானதும், வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. வாயில் கதவுகளில் நெய் பூசியதால் கரிய நிறமும், வலிமையும் உடையதாய் மாறிவிட்டன.
- மேகங்கள் உலவும் மலைமுகடுகளைப் போல மாளிகைகள் ஓங்கி உயர்ந்து உள்ளன. இடைவிடாது பாய்ந்தோடும் வைகையைப் போல மக்கள் வாயில் வழி சென்று கொண்டே இருக்கின்றனர்.
- மண்டபம், கூடம், அடுக்களை என பல்வேறு அங்கங்களை உடையதாய், வான்வரை ஓங்கிய, தென்றல் காற்று இசைத்து நுழையும் பல சாளரங்களைக் கொண்ட நல் இல்லங்கள் உள்ளன.
- ஆறு போன்ற அகன்ற நீண்ட தெருக்களில் மலையெனக் குவிந்து கிடக்கும் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்ற நகரம்,
- விழா பற்றிய முரசறைவோனின் முழக்கமானது. பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கிறது.
- இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கைகளினால் குடைந்து விளையாடும் தன்மை போல எழுகின்றது.
- இசையைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும், அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன என்று மதுரைக் காஞ்சி, மதுரையின் பெருமையைக் கூறுகிறது.

### சொல்லும் பொருளும் :

| | | |
|---|---|---|
| மணிநீர்க்கிடங்கு | – | தெளிந்த நீரையுடைய அகழி |
| அணங்கு | – | தெய்வம் |
| நெடுநிலை | – | நெடியவாசல் (வாயில்) |
| புழை | – | சாளரம் |
| முந்நீர் | – | கடல் |
| கயம் | – | நீர்நிலை |
| நியமம் | – | அங்காடி |
| இருபெரு நியமம் | – | நாளங்காடி அல்லங்காடி. |
| கலிகொள் சும்மை | – | மகிழ்ச்சி ஆரவார ஓசை |
| புரிசை | – | மதில் |
| நிவந்த | – | உயர்ந்த |
| சில்காற்று | – | தென்றல் |
| மாகால் | – | பெருங்காற்று |
| பணை | – | முரசு |
| ஓவு | – | ஓவியம் |

### இலக்கணக் குறிப்புகள் :

| | | |
|---|---|---|
| ஓங்கிய | – | பெயரெச்சம் |
| குழாஅத்து | – | செய்யுளிசை அளபெடை |
| மா கால் | – | உரிச்சொல் தொடர் |
| இமிழிசை | – | வினைத்தொகை |
| முந்நீர் | – | பண்புத்தொகை |
| மகிழ்ந்தோர் | – | வினையாலணையும் பெயர் |
| நிலைஇய | – | சொல்லிசை அளபெடை |
| வாயில் | – | இலக்கணப் போலி |
| முழங்கிசை | – | வினைத்தொகை |
| நெடுநிலை | – | பண்புத்தொகை |
| கிடந்தன்ன | – | உவம உருபு |

www.nammakalvi.com



**பகுபத உறுப்பிலக்கணம் :**

**ஆழ்ந்த - ஆழ் + த் (ந்) + த் + அ**

ஆழ் - பகுதி,
த் - சந்தி,
ந் - ஆனது விகாரம்,
த் - இறந்த கால இடைநிலை
அ - பெயரெச்சவிகுதி

**ஓங்கிய - ஓங்கு + இன் + ய் + அ**

ஓங்கு - பகுதி,
இன் - இறந்த கால இடைநிலை,
ய் - உடன்படு மெய் சந்தி,
அ - பெயரெச்ச விகுதி

**மகிழ்ந்தோர் - மகிழ் + த் (ந்) + த் + ஓர்**

மகிழ் - பகுதி,
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்,
த் - இறந்த கால இடைநிலை
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**எழுந்து - எழு + த் (ந்) + த் + உ**

எழு - பகுதி,
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**மூழ்கி - மூழ்கு + இ**

மூழ்கு - பகுதி,
இ - வினையெச்ச விகுதி.

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

**1. மதுரைக் காஞ்சி - பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.**

- காஞ்சி என்றால் நிலையாமை என்று பொருள். ''மதுரை'' நகரைக் குறிக்கும்.
- மதுரை நகரின் சிறப்புகளைப் பாடுவதாலும், நிலையாமையைப் பற்றியக் கருத்துகளைக் கூறுவதாலும், இப்பெயர் பெற்றது.

### சிறுவினா

**1. ''மாகால் எடுத்த முந்நீர் போல'' - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.**

**இடம் :**

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சி என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

மதுரையின் வளங்களையும், விழாக்களையும் பற்றிக் குறிப்பிடும் போது புலவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**விளக்கம்:**

ஆறு போன்ற தெருக்களில் பல்வேறு பொருள்களை வாங்க வந்த பல்வேறு மொழி பேசும் மக்களின் ஒலியோடு விழாக்கள் பற்றிய அறிவிப்புகள் ஒலிக்கின்றன. ''முரசறைவோரின் முழக்கம், பெருங்காற்று புகுந்த கடலொலி போல்'' ஒலிக்கிறது. இதனையே ''மாகால் எடுத்த முந்நீர் போல'' என்றார் மாங்குடி மருதனார்.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. ஆழ்ந்த மணிநீர் கிடங்கின் – மணிநீர் கிடங்கு என்பது யாது?

அ) மணல் ஆ) கடல் இ) அகழி ஈ) ஆறு

விடை : இ) அகழி

2. மதுரைக்காஞ்சி நூலின் மொத்த அடிகள் எத்தனை?

அ) 732 ஆ) 752 இ) 782 ஈ) 792

விடை : இ) 782

3. மதுரைக்காஞ்சி நூல் மதுரை நகரின் சிறப்புகளை எத்தனை அடிகளில் பெருமைப்படுத்தி உள்ளது?

அ) 254 ஆ) 284 இ) 324 ஈ) 354

விடை : ஈ) 354

4. பொருத்துக:

அ) புழை - 1. நீர்நிலை
ஆ) பனை - 2. ஓவியம்
இ) கயம் - 3. முரசு
ஈ) ஓவு - 4. சாளரம்

விடை : அ) 4 ஆ) 3 இ) 1 ஈ) 2

5. குழாஅத்து – எவ்வகை அளபெடை?

அ) சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) இயற்கை அளபெடை

விடை : இ) செய்யுளிசை அளபெடை

6. ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு உள்ள நகரம் எது?

அ) தஞ்சாவூர் ஆ) சென்னை இ) மதுரை ஈ) முசிறி

விடை: இ) மதுரை

7. மதுரைக்காஞ்சி பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) பரணர் இ) ஓரம்போகியார் ஈ) மாங்குடி மருதனார்

விடை : ஈ) மாங்குடி மருதனார்

8. மாங்குடி மருதனார் எட்டுத் தொகையில் ................ பாடல்களைப் பாடியுள்ளார்.

அ) 11 ஆ) 12 இ) 13 ஈ) 14

விடை : இ) பதின்மூன்று

9. மதுரைக்காஞ்சி நூலின் பாட்டுடைத் தலைவர் ................

அ) தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன்
ஆ) கிள்ளிவளவன்
இ) வெற்றிவேற்செழியன்
ஈ) நெடுஞ்செழியன்

விடை : அ) தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன்

www.nammakalvi.com



**10. காஞ்சி என்ற சொல்லின் பொருள் ................ ஆகும்.**

அ) உண்ணாமை ஆ) அழியாமை
இ) இல்லாமை ஈ) நிலையாமை **விடை : ஈ) நிலையாமை**

**11. மாகால் - இலக்கணக் குறிப்பு யாது?**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) தொழிற்பெயர் ஈ) உரிச்சொல் தொடர்

**விடை : ஈ) உரிச்சொல் தொடர்**

## குறுவினா

**1. மாங்குடி மருதனார் - குறிப்பு வரைக.**

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

## சிறுவினா

**1. மதுரைக்காஞ்சி குறிப்பு வரைக.**

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமைத் தத்துவத்தைக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப் பெயர்.
- இந்நூல் 782 அடிகளை உடையது.
- இந்நூலை இயற்றியவர் மாங்குடி மருதனார் ஆவார்.
- இந்நூலின் பாட்டுடைத்தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்.

## நெடுவினா

**1. மதுரை மாநகரின் அழகை மாங்குடி மருதனாரின் வழி விளக்குக.**

**முன்னுரை:**

மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ள நூல்களுள் பதினெண் மேற்கணக்கில், மதுரைக்காஞ்சி முதன்மையானது. இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை கொத்தளம், அந்நகரில் நிகழும் திருவிழாக்கள், பலவகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன.

**மதுரையின் சிறப்புகள்:**

மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழைமையானதும் வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய் பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன. இடைவிடாது ஓடுகின்ற வையை ஆற்றைப் போல மக்கள் எப்போதும் வாயில்கள் வழிச் செல்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக் கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் .பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன. ஆறு போன்ற

www.nammakalvi.com



அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மை போல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன.

**முடிவுரை :**

காலை தொடங்கி மறுநாள் விடியல்வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்ணுற்றதை முறைப்படுத்திக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 193

**1. ஊரின் பெயர்க்காரணம் எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**கலந்துரையாடுபவர்கள்: செல்வன், கிள்ளை, மது.**

இன்று நாம் வகுப்பில் மதுரையைப் பற்றி பல அரிய செய்திகள் அறிந்து கொண்டோம். அது போல் எங்கள் ஊருக்கும் பெயர் ஏற்பட காரணங்கள் உண்டு. நாம் கலந்துரையாடி தெரிந்து கொள்வோமா!

**செல்வன்** : மது, கிள்ளை நான் முதலில் சொல்லட்டுமா.

**மது** : சொல் செல்வா! உன் ஊர் ஈரோடு தானே.

**செல்வன்** : ஆம், ஈரோடு என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா .......

துர்வாச முனிவரின் சாபத்துக்கு ஆளான திருமாலின் வாயில் காப்போனாகிய தைபர் என்பவரின் தலை ஓடு நான்காகப் பிளவுபட்டதாம். அதில் பெரிய ஓடு வீழ்ந்த இடம் பேரோடு என்றும், சிறிய ஓடு விழுந்த இடம் சித்தோடு என்றும், வெள்ளை ஓடு விழுந்த இடம் வெள்ளோடு என்றும், ஈர ஓடு விழுந்த இடம் ஈரோடு என்றும் பெயர் பெற்றதாம். சித்தோடு, பேரோடு, வெள்ளோடு ஆகிய ஊர்கள் ஈரோட்டிற்கு அருகிலே உள்ளன.

**கிள்ளை** : அப்படியாடா ஆச்சரியமாக இருக்கிறதே........

சரி செல்வன் எங்கள் சொந்த ஊர் தூத்துக்குடி. அதன் பெயர்க்காரணம் என்ன தெரியுமா?

தூர்த்து + குடி. 'தூர்த்து' என்பதன் பொருள் 'கடலில் இருந்து உருமாறி வந்த நிலம்' என்பது ஆகும். 'குடி' என்பதற்கு 'குடியமர்தல்' என்று பொருள். கடலில் இருந்து உருமாறி மக்கள் வாழத் தகும் நகராக மாறியதால் 'தூத்துக்குடி' எனப் பெயர் பெற்றதாம்.

**மது** : எங்கள் ஊர் சென்னையில் உள்ள பூவிருந்தவல்லி ஆகும். அதற்கு ஏன் அப்பெயர் வந்தது தெரியுமா?

மல்லிகைப்பூக்கள் (செடிகள்) அதிக அளவில் பயிரிடப்பட்ட பகுதி இது. இவ்விடத்தை சமஸ்கிருதத்தில் 'புஷ்பகவல்லி' என்றும், தமிழில் 'பூவிருந்தவல்லி' என்றும் வழங்கினர். நாளடைவில், பூந்தமல்லியாக மாறிவிட்டது.

நாம் மூவரும் நம் ஊரின் பெயர்க்காரணத்தை அறிந்து வைத்திருக்கிறோம் மகிழ்ச்சியாக உள்ளது அல்லவா?

(மாணவர்களே உங்கள் ஊரின் பெயர்க்காரணத்தையும் அறிந்து கொள்ளுங்கள்)

www.nammakalvi.com



**2. தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின - இத்தொடர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளைத் திரட்டி ஐந்து மணித்துளிகள் பேசுக.**

**மதுரையின் சிறப்புகள் (மேடைப் பேச்சு)**

- இந்திய துணைக்கண்டத்தில் மிகவும் தொன்மையான வரலாற்றைக் கொண்ட நகரம் மதுரை ஆகும். தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம். 2500 ஆண்டுகளுக்கு மேலான பழம் பெருமை வாய்ந்தது. கி.மு 4 முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரையிலான காலம் சங்ககாலம். இக்காலத்தில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழை வளர்த்த பெருமையுடைய நகரம்.
- கௌடில்யர், மெகஸ்தனிஸ் ஆகியோரின் குறிப்புகளிலும் மதுரை பெருமை பெறுகிறது.
- மரபுச்சின்னமாக மதிக்கப்படும் மதுரை பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு ஆட்சியாளர்களால் ஆளப்பட்ட நகரமாகும்.
- சங்ககாலப் பாண்டியர், இடைக்காலச்சோழர், பிற்காலச் சோழர், பிற்காலப்பாண்டியர், மதுரை சுல்தான், விஜயநகரப்பேரரசு, மதுரை நாயக்கர்கள், கர்நாடக இராச்சியம், ஆங்கிலேயர்கள் போன்றோர் ஆண்டுள்ளனர்.
- பல வரலாற்று நினைவிடங்களைக் கொண்டிருந்த போதிலும் மீனாட்சியம்மன் கோவிலும். திருமலை நாயக்கர் அரண்மனையும் புகழ் பெற்றவை. சித்திரைத் திருவிழாவும், மீனாட்சி அம்மன் திருக்கல்யாணமும் இந்நகரின் புகழ்பெற்ற திருவிழாக்கள் ஆகும். சித்திரைத் திருவிழாவில் அழகர் வைகை ஆற்றில் இறங்குவது சிறப்பு நிகழ்வாகும்.
- பொங்கல் திருநாளில் நகரின் அருகில் உள்ள அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் நடைபெறும் ஏறுதழுவுதல் நிகழ்வும் பெயர் பெற்றது ஆகும்.
- இந்நகரம் கூடல், மல்லிகை மாநகர், நான்மாடக் கூடல், திரு ஆலவாய் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
- 7ம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற்புராணத்திலும் மதுரையின் சிறப்புப் பெயர்கள், பெருமைகள் பட்டியல் இடப்பட்டுள்ளன. சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரத்திலும் மதுரை பற்றிய குறிப்புகள் உள்ளன.
- நற்றிணை, திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, அகநானூறு சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம் போன்ற அனைத்து இலக்கியங்களிலும் மதுரையின் பெருமை பேசப்படுகிறது.
- சிலப்பதிகாரம் மூலம் மதுரையில் இயலும், இசையும் பொங்கிப் பெருகியது என்பதை உணரலாம். இவ்வாறு மதுரையின் பெருமை வரலாற்று சிறப்பு என பேசிக் கொண்டே போகலாம். அதற்கு முடிவே இராது.

நன்றி ! வணக்கம்.

www.nammakalvi.com



*விரிவானம்*

# இயல் ஏழு
# சந்தை

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

1. **உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.**

**உற்பத்தியாகும் பொருள் :**

மனிதர்கள் நாடோடியாக, வேட்டையாடி கிடைத்த உணவை உண்டனர். பின்னாளில் நால்வகை நிலங்களில் உற்பத்தி பெருகியது. காய்கறி, கீரை, தானியம் ஆகியவற்றை உற்பத்தி செய்தனர்.

**சந்தையில் காணும் பொருள்:**

உழவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்கவும், மாற்றுப்பொருளை வாங்கவும் முச்சந்தி, நாற்சந்தி என மக்கள் கூடும் இடங்களில் கடை விரித்துப் பொது வணிகமாக்கினர்.

### நெடுவினா

1. **எங்கள் ஊர் சந்தை என்னும் தலைப்பில் நாளிதழ் செய்தி ஒன்றை எழுதுக.**

**நாளிதழ் செய்தி**

**மானூர் சந்தையின் புகழ்:**

ஜூன் 16 - நம் மக்களின் வணிக முறைகளில் ஒன்று சந்தை, தினசரி சந்தை, வாரச் சந்தை என இரண்டு உண்டு. எங்கள் ஊரில் வாரச் சந்தைதான் வாரத்தில் ஒரு நாள் [சனிக்கிழமை] மட்டும் கூடும். எங்கள் ஊர் சந்தையில் எம் கிராமத்திலும், பக்கத்து கிராமங்களிலும் விளையும் காய்கறி, கீரை, தானிய வகைகள் விற்பனைக்கு வரும். பக்கத்து மலைப்பகுதியில் இருந்து மிளகு, மல்லி, சீரகம் கொண்டு வந்து விற்பனை செய்வார்கள்.

காய்கறிகள், தானியவகைகள், மளிகைப் பொருட்கள், தின்பண்டங்கள் ஈயம், மண், இரும்பு பாத்திரங்கள் தோட்ட வேலை செய்வதற்கு உரிய களைக்கொத்தி, மண்வெட்டி, மேலும் துணி மணி வகைகள் என அனைத்தும் எம் ஊர் சந்தையில் வாங்கலாம்.

நூற்றுக்கணக்கான கிராம மக்களுக்கு நேர்மையான விலையில் அனைத்தும் கிடைக்கும். என் தாத்தா சிறு வயதில் சந்தைக்குச் செல்லும் பொழுது திருவிழாவிற்குப் போவது போல மகிழ்ச்சியாய்ச் செல்வாராம். ஏனெனில் அக்காலத்தில் கழைக்கூத்து, பொம்மலாட்டம் கூட சந்தைவெளியில் உண்டாம்.

www.nammakalvi.com



எங்கள் ஊர்சந்தையிலே ஆடு, மாடு வாங்குவதை நினைச்சாலே வேடிக்கையா இருக்கும். துண்டைப் போட்டு கைகளை மறைச்சு விலைபேசுவது ஒரு பக்கம், பல், வால், கொம்பைப் பார்த்து விலை பேசுவது என ஒவ்வொருவரும் ஒவ்வொரு உத்தியைக் கையாள்வர் சந்தை விற்கும் வாங்கும் வணிகத்தளம் மட்டுமல்ல, உறவுகளுக்கு உயிரூட்டும் இடமாகவும் இருக்கும்.

வாங்க! வாங்க! என கல்யாண வீடு போல வரவேற்று நலம் விசாரித்த பின்புதான் வியாபாரம் தொடங்கும்.

எம் ஊர் சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்கும் உறவாக மட்டும் இருப்பதல்ல. சந்தையில் பழகியவர்கள் சம்பந்தியான கதைகளும் உண்டு.

சந்தையின் சாதாரண விசாரிப்புகளிலும் நேசம் உண்டு. நேர்மை உண்டு.

நீங்களும் ஒருமுறை எங்கள் சந்தைக்கு வந்துதான் பாருங்களேன்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. மாட்டுத்தாவணி என்னும் சொல்லில் தாவணி என்பதன் பொருள் ________**

அ) நுந்தை ஆ) சந்தை இ) கூட்டம் ஈ) தொழுவம்

**விடை : ஆ) சந்தை**

**2. கூற்று 1: சந்தையில் வணிகம் மட்டும் அல்லாது வாங்குபவரின் மனநிறைவும் பேணப்பட்டது.**
**கூற்று 2 : பகலில் செயல்படும் அங்காடி அல்லங்காடி**
**கூற்று 3 : நாகர்கோவில் தோவாளை பூச்சந்தையாகும் – இவற்றுள் சரியான கூற்று எவை?**

**விடை : கூற்று 1, 3 சரியானவை**

**3. புகழ்பெற்ற போச்சம்பள்ளிச் சந்தை எம்மாவட்டத்தில் உள்ளது?**

அ) கிருஷ்ணகிரி ஆ) தர்மபுரி
இ) கடலூர் ஈ) தஞ்சாவூர்

**விடை : அ) கிருஷ்ணகிரி**

### குறுவினா

**1. நாளங்காடி, அல்லங்காடி – வேறுபடுத்துக.**

- பகலில் செயல்படும் கடைவீதிகளை ‘நாளங்காடி’ என்றும்
- இரவில் செயல்படும் கடைவீதிகளை ‘அல்லங்காடி’ என்றும் கூறுவர்.

www.nammakalvi.com



## சிறுவினா

**1. சந்தைக்கும் பல்பொருள் அங்காடிக்கும் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.**

| சந்தை | பல்பொருள் அங்காடி |
|---|---|
| கிராமத்து மக்கள் தங்களுடைய நிலத்தில் விளையும் பொருள்களைத் தாங்களே விற்பனை செய்வர். | பொருள்களை உற்பத்தி செய்கிறவன் ஒருவன். விற்பனையாளன் வேறு ஒருவன். |
| இடைத்தரகருக்கு வேலை இல்லை. குளிரூட்டப்பட்ட அறை இல்லை. விற்கிறவனும், வாங்குகிறவனும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் அதுவே விலை. | இங்கு, பொருள் கொள்முதல் செய்து தர இடைத்தரகர் உண்டு. குளிரூட்டப்பட்ட அறை. விலையை விற்பவனே முடிவு செய்து விற்கிறான். |
| சந்தையில் சத்தம் இருக்கும். விசாரிப்புகளுக்கு மத்தியில் ஓர் உறவுக்கம்பி இழையோடும். குழந்தைகளுக்குத் தக்காளி கேரட் கொடுத்து மகிழ்வர் | இங்கு மக்கள் பேசிக் கொள்வதும் இயந்திரங்களின் ஓசைகளும் பேரிரைச்சலை ஏற்படுத்துகின்றன. குழந்தைகள் எந்தப் பொருளையும் தொடக்கூடாது. |

**2. போச்சம்பள்ளிச் சந்தை - குறிப்பு வரைக.**

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள். விற்பவரும் வாங்குபவரும் உறவுகளாப் பேசி மகிழும் ஆரவாரம் அங்கே ஒலிக்கிறது. 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது. கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்கிறது.

**3. தமிழகத்தில் சந்தைக்குப் பெயர் பெற்ற ஊர்களைப் பட்டியலிடுக.**

- மணப்பாறை - மாட்டுச்சந்தை
- அய்யலூர் - ஆட்டுச்சந்தை
- ஒட்டன்சத்திரம் - காய்கறிச்சந்தை
- நாகர்கோவில் தோவாளை - பூச்சந்தை
- ஈரோடு - ஜவுளிச்சந்தை
- கடலூர், காராமணி குப்பம் - கருவாட்டுச் சந்தை
- நாகப்பட்டினம் - மீன் சந்தை

## கற்பவை கற்றபின்

பக்கம்: 199

**1. சந்தை நிகழ்வுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.**

**நாடகம்**

நேரம் : காலை

உறுப்பினர் : தாத்தா, கீர்த்தி, குமரன், தாத்தாவின் நண்பர்

www.nammakalvi.com



## காட்சி - 1

**தா.நண்பர்** : வாங்க! வாங்க! என்ன பேரன் பேத்தியோடே வரீக!

**தாத்தா** : ஆமா ஆமா ...... ஊர்ல இருந்து வந்திருக்காக. அங்கெல்லாம் 'மால்' போய் பழகுனவங்க....வித்தியாசமா இருக்கட்டுமேனு கூட்டிட்டு வந்தேன்.

**தா.நண்பர்** : ஓ ..... அப்படியா ..... சரி சரி ....

நான் பொருள்கள் எல்லாம் வாங்கி விட்டேன். நீங்க சீக்கிரம் போங்க கொஞ்ச நேரத்துல கூட்டம் அலைமோதும்.

## காட்சி - 2

(தாத்தா, கீர்த்தி, குமரன்)

**குமரன்** : என்ன தாத்தா கூட்டம் அலைமோதுமா என்ன?

**தாத்தா** : ஆமாம் குமரா! சுற்றி உள்ள அத்தன ஜனமும் இந்த சந்தைக்குத் தான் வருவாக.....

**கீர்த்தி** : அப்படியென்ன தாத்தா இந்த சந்தையில விசேஷம்.

**தாத்தா** : இந்த சந்தையிலே கிடைக்காத பொருளே கிடையாது. ..... கடுகு, சீரகத்துல இருந்து, மண்பானை, அலுமினியப்பானை, பூ, பழம், இரும்புப்பொருள், துணிமணின்னு என்னென்ன உண்டோ அனைத்தும் வாங்கலாம்.

**குமரன்** விலை எல்லாம் எப்படித் தாத்தா இருக்கும்?

**தாத்தா** கண்ணு ..... கிராமத்து சந்தையில, உற்பத்தியாளன் தான் விற்பனையாளன். பிற ஊருக்கு அனுப்புவது, இடைத் தரகர்கள், குளிரூட்டப்பட்ட அறை என்று எந்தக் கூடுதல் செலவும் கிடையாது. உற்பத்தியாளரே தருவதால் சரியான விலைக்குக் கிடைக்கும்.

**கீர்த்தி** : தாத்தா ....... அதோ அந்தப்பக்கம் கோழி, ஆடு, மாடும், இருக்கு

**தாத்தா** : ஆமாம்மா..... உழவர்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கின்ற கோழி, கோழிக்குஞ்சு, ஆடு, மாடுகளைக் கூட்டி வந்து விலை கூறி விற்பர். கால்நடைகளை வளர்த்து விற்பதும் சிலருக்கான தொழில் .......

**இருவரும்** : சந்தையைப் பற்றிக் கேட்கவே ஆசையா இருக்கு தாத்தா. இனி நாங்கள் ஊருக்கு வரும் போதெல்லாம், சந்தை கூடும் நாளில் எங்களை அழைத்து வாங்க தாத்தா! சரியா!.

www.nammakalvi.com



**2. சந்தை/அங்காடியில் உள்ள பொருள்களுக்கான விலைப்பட்டியல் எழுதிய விளம்பரப்பதாகை ஒன்றை உருவாக்குக.**

**"முத்து மளிகை"**

**தரமே நிரந்தரம்**

விலைப்பட்டியல்

| பொருள்கள் | விலை (₹) |
|---|---|
| அரிசி 1 கிலோ | 55 |
| து.பருப்பு 1 கிலோ | 75 |
| உ.பருப்பு 1 கிலோ | 80 |
| க.பருப்பு 1 கிலோ | 70 |
| சோப்புத்தூள் (சலவைத்தூள்) 1 கிலோ | 80 |
| தே.எண்ணெய் 1 லி | 200 |
| ந.எண்ணெய் 1 லி | 200 |
| க.எண்ணெய் 1லி | 180 |
| நாட்டுச் சர்க்கரை 1கி | 60 |
| நாட்டுக் கோழி முட்டை 1 | 10 |
| கடுகு 1 கிலோ | 100 |
| சீரகம் 1 கிலோ | 100 |
| மிளகு 1 கிலோ | 400 |
| வெந்தயம் 1 கிலோ | 300 |
| கம்பு 1 கிலோ | 60 |
| சோளம் 1 கிலோ | 55 |
| சர்க்கரை (சீனி) | 45 |

**"தரமான பொருட்கள் குறித்த நேரத்தில் சரியான விலையில் உங்கள் இல்லத்திற்கே கொண்டு வருகிறோம்.**

*உரிமை : முத்து மளிகை*

**3. சிறு வணிகர் ஒருவரிடம் நேர்காணல் செய்க.**

எ.கா: சந்தைப் பொருள்கள் மீதமானால் என்ன செய்வீர்கள்?

இடம் : கடை வீதி

சிறுவணிகர் : நாகராஜன். கா.

நேர்காணபவர் : அமிழ்தன்

**அமிழ்** : ஐயா! தங்கள் பெயர் என்ன?

**வணிகர்** : என் பெயர் நாகராஜன்.

**அமிழ்** : எத்தனை ஆண்டுகளாக இந்த இடத்தில் வணிகம் செய்கிறீர்கள்?

**வணிகர்** : பத்து ஆண்டுகள் முடிந்து போயிருச்சு.

**அமிழ்** : என்னென்ன பொருள்கள் வைத்து வணிகம் செய்கிறீர்கள்?

**வணிகர்** : தேங்காய்,கீரை வகைகள், கத்திரிக்காய், வெண்டைக்காய், தக்காளி போன்ற கறிகாய் வகைகள்.

**அமிழ்** : ஐயா! இவையெல்லாம் உங்கள் தோட்டத்தில் விளைந்ததா?

**வணிகர்** : இல்லை தம்பி! எனக்குத் தோட்டம் துரவெல்லாம் கிடையாது. பக்கத்து கிராமத்துக்குக் காலையிலேயே போயி, தோட்டக்காரங்ககிட்ட நேரடியா வாங்கிட்டு வருவேன்......

**அமிழ்** : உங்களுக்குப் போதுமான வருமானம் வருதா ஐயா?

**வணிகர்** : எங்க தம்பி, போட்ட காச எடுத்தாலே போதும் .... சில நாள் அது கூட கிடைக்காது.

**அமிழ்** : ஏன் ஐயா! சந்தை, தினசரி சந்தை இப்படி எங்காவது போய் விற்கலாம் அல்லவா!

**வணிகர்** : அங்கெல்லாம் பெரிய, பெரிய வணிகருங்க இருப்பாங்க. கடை வாடகைக்குப் பிடிக்கணும் வரி குடுக்கணும் அதெல்லாம் கட்டுப்படியாகாது அப்பா.....

**அமிழ்** : ஐயா! இந்தக் காய்கறி, கீரை எல்லாம் மிஞ்சிப்போனா என்ன பண்ணுவீங்க?

**வணிகர்** : சாயுங்காலம் வரை பாத்துட்டு விலையைக் கொஞ்சம் குறைச்சுக் குடுப்பேன். இல்லன்னா தெரிஞ்ச ஹோட்டல் கடைகள். வேற மளிகைக் கடையில கொடுத்துருவேன் தம்பி .....

**அமிழ்** : சரி ஐயா! கேட்ட கேள்விக்கு எல்லாம் பொறுமையாய்ப் பதில் சொன்னீங்க. உங்க வணிகம் வளர வாழ்த்துகள் ஐயா

நன்றி!

**4. ''கடன் அன்பை முறிக்கும்'' இது போன்ற சொற்றொடர்களைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், சந்தைகளில் பார்த்து எழுதுக.**

- கடன் அன்பை முறிக்கும்.
- கடன் கிடையாது.
- கடன் நட்புக்குப் பகை.
- கடன் படாதே கலங்கி நில்லாதே.
- கடன் கேட்காதீர்.
- உனக்குக் கடன் தந்தால் என் கடன் அடைக்க இயலாது.
- கடனாளி ஆகாதே. என்னையும் கடனாளி ஆக்காதே.

※※⁂⁂⁂※※

கற்கண்டு

# இயல் ஏழு ஆகுபெயர்

## பாடநூல் வினாக்கள்

### சிறுவினா

**1. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்:**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி. (தன் + குறிப்பு + ஏற்றம் + அணி)

**எ.கா:**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப்பு ன்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

**அணிப் பொருத்தம்:**

சேறுபட்ட, நீர்வளம் மிகுந்த வயல் பகுதிகளில், பொய்கைகளில் செவ்வாம்பல் மலர் விரிவது இயல்பான நிகழ்வு. இதைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்து விட்டதாக எண்ணியதாக கவிஞர் தன் குறிப்பினை ஏற்றிக் கூறியதால் தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

**2. பண்பாகு பெயர், தொழிலாகுபெயர் - விளக்குக.**

**பண்பாகு பெயர்:**

‘மஞ்சள் பூசினாள்’

‘மஞ்சள்’ என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகி வந்துள்ளது.

**தொழிலாகு பெயர்:**

‘வற்றல் தின்றான்’

‘வற்றல்’ என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப் பொருளுக்கு ஆகிவந்துள்ளது.

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. கார் அறுத்தான் - எவ்வகை ஆகுபெயர்?**

அ) பொருளாகு பெயர் ஆ) சினையாகு பெயர்

இ) காலவாகு பெயர் ஈ) கருவியாகு பெயர்

**விடை: இ) காலவாகு பெயர்**

**2. பொருத்தமான விடையைத் தேர்க.**

அ) வகுப்பறை சிரித்தது - 1. எண்ணலளவை ஆகுபெயர்

ஆ) மஞ்சள் பூசினாள் - 2. காரியவாகுபெயர்

இ) பைங்கூழ் வளர்ந்தது - 3. பண்பாகுபெயர்

ஈ) ஒன்று பெற்றால் ஒளிமயம் - 4. இடவாகுபெயர்

i) 4 3 2 1 ii) 3 2 1 4 iii) 4 2 1 3 iv) 3 1 2 4

**விடை: i) 4 3 2 1**

## சிறுவினா

**1. ஆகுபெயர் என்றால் என்ன? அதன் வகைகள் எத்தனை?**

- ஒன்றின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும்.
- தொல்காப்பியர் ஆகுபெயர்கள் ஏழு வகைப்படும் எனவும், நன்னூலார் பதினைந்து எனவும் வகுத்துள்ளனர்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 201

**1) ஆகுபெயரைக் கண்டறிக.**

அ) தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள். **தொழிலாகு பெயர்**

தமிழரசி வள்ளுவரைப் படித்தாள். **கருத்தாவாகு பெயர்**

ஆ) மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது. **இடவாகு பெயர்**

நாடும் வீடும் நமதிரு கண்கள். **சினையாகு பெயர்**

இ) கலைச்செல்வி பச்சை நிற ஆடையை உடுத்தினாள். **தொழிலாகு பெயர்**

கலைச்செல்வி பச்சை உடுத்தினாள். **பொருளாகு பெயர் (முதலாகு பெயர்)**

ஈ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி. **எண்ணலளவையாகு பெயர்**

நாலடி நானூறும் இரண்டடித் திருக்குறளும் வாழ்வுக்கு உறுதி தரும். **காரியவாகுபெயர்**

உ) ஞாயிற்றை உலகம் சுற்றி வருகிறது. **தொழிலாகுபெயர்**

நீங்கள் கூறுவதை உலகம் ஏற்குமா. **இடவாகுபெயர்**

**2. ஆகுபெயர் அமையுமாறு தொடர்களை மாற்றி எழுதுக.**

**அ) மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.**

மதுரையில் இரவு வணிகம் உண்டு.

**ஆ) இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்.**

இந்தியா எளிதாக வென்றது.

**இ) நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்.**

நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கமே சிரித்தது.

**ஈ) நீரின்றி இவ்வுலக மக்களால் இயங்க முடியாது.**

நீரின்றி உலகு இயங்காது.

## சிந்தனை வினா

**1. தற்காலப் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

தற்காலத்தில் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் ஆகுபெயர் பயன்படுத்துகிறோம்.

**சான்றுகள்:**

- சிவசங்கரியைப் படித்தேன் - என்னும் பொழுது சிவசங்கரி எழுதிய கதையைப் படித்தேன் என்று பொருள்பட, சிவசங்கரி - என்பது அவர் எழுதிய நூலுக்கு ஆகி வந்தது.
- ஐந்து மீட்டர் கொடு - துணிக்கடைக்குச் செல்லும் பொழுது, "ஐந்து மீட்டர் என்பது - நாம் தேர்ந்தெடுத்த துணிக்கு ஆகி - நீட்டலளவை ஆகுபெயராய் பயன்படுத்துகிறோம்.
- மஞ்சள் பூசினேன் - என்று கூறும் பொழுது "மஞ்சள் வண்ணத்தில் உள்ள கிழங்கை அரைத்துப் பூசினேன்" என்று விளக்காமல், "மஞ்சள் பூசினேன்" என்கிறோம். இஃது மஞ்சள் வண்ண கிழங்கைக் குறிக்கும் பண்பாகு பெயராகும்.

**2. பட்டப்பெயர்கள் ஆகுபெயர்கள் ஆகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு.**

பட்டப்பெயர்கள் ஆகு பெயராகும்.

**சான்று:**

- வாயாடி வந்தாள் - இதில் குறிப்பிட்ட பெண்ணின் பெயரைச் சொல்லிக் கூறாமல், அவள் ஓயாது பேசும் இயல்பை பெயராக்கி "வாயாடி" என்று பட்டப்பெயருடன் கூறுகிறோம். "பேசுதல்" (வாயாடுதல்) என்னும் காரியத்திற்கு ஆகி வருகிறதல்லவா.
- கலாரசிகன் வந்துவிட்டான் - இத்தொடரில் "கலா ரசிகன்" என்னும் பட்டப்பெயர் அவன் கலைகளை விரும்பிப் பார்க்கும் கேட்கும் செயல்களுக்கு ஆகி வருவதால், பட்டப்பெயர்களும் ஆகு பெயர் ஆகும்.

www.nammakalvi.com



## மொழியை ஆள்வோம்

பக்கம்: 204

**படித்துச் சுவைக்க.**

**எல்லார்க்கும் பெய்யும் மழை**

ஏந்திக்கொள்கிறார்கள் சிலர்
வரமாக
ஏற்றுக்கொள்கிறார்கள் சிலர்
வேறு வழியின்றி
ஒதுங்கிக்கொள்கிறார்கள் சிலர்
ஒத்துக்கொள்ளாதெனப்
பாறையில் விழுந்து
பயன்படாமலே போகின்றன
சில துளிகள்
சாக்கடையில் விழுந்து
சங்கமமாகின்றன சில
ஆனாலும்
எப்போதும்போல
இன்னமும்
எல்லோருக்குமாகப்
பெய்துகொண்டுதான் இருக்கிறது
மழை!

**காலை**

ஒவ்வொரு முறையும்
காவிரி ஆற்றைக்
கடந்து செல்கையில்
நீந்திக் களித்த நாட்கள்
நினைவுக்கு வந்தன!
குளித்து மகிழ்ந்த ஆற்றை
குழந்தையிடம் காட்டிய போது
அவள் கேட்டாள் ....
'எப்படி அம்மா....
மணலில் நீந்திக்
குளித்தாய்?''

**மொழிபெயர்க்க.**

**Conversation between two friends meeting by chance at a mall.**

**Aruna** : Hi! Vanmathi! It's great to see you after a long time.

**Vanmathi** : It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I'm doing good. How about you?

**Aruna** : Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you?

**Vanmathi** : I came with my father. He has gone to buy tickets for a 3D movie.

**Aruna** : Which movie?

**Vanmathi** : Welcome to the jungle.

**Aruna** : Great! I am going to ask my parents to take me to that movie.

**இரண்டு தோழிகள் வணிகவளாகத்தில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தபோது நடந்த உரையாடல்.**

அருணா : வான்மதி, என்ன ஒரு ஆச்சர்யம் நீண்ட நாட்களுக்குப்பின் உன்னைப் பார்க்கிறேன், மகிழ்ச்சி.

வான்மதி : எனக்கும் மகிழ்ச்சியும், ஆச்சர்யமும் தான்! உன்னைப் பார்த்து எவ்வளவு காலம் ஆகிவிட்டது. ஆறு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. நான் நன்றாக இருக்கிறேன் நீ எப்படி இருக்கிறாய்.

www.nammakalvi.com



அருணா : நான் என் பெற்றோருடன் வந்தேன். அவர்கள் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் உள்ள பிரிவில் உள்ளார்கள். நீ..?

வான்மதி : நான் என் தந்தையுடன் வந்தேன் இவ்வளாகத்தில் நடைபெறும் முப்பரிமாண (3D) திரைப்படத்திற்கு அனுமதி சீட்டு வாங்க சென்றிருக்கிறார்.

அருணா : என்ன படம்?

வான்மதி : காட்டுக்குள் வரவேற்பு

அருணா : ஓ... நானும் என் பெற்றோரிடம் அந்தப் படத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கேட்க போகின்றேன்.

## பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக.

**1. புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)**

அ) நல்ல புத்தகங்கள் படிக்கலாம்.

ஆ) நல்ல புத்தகத்தில் ஆழ்ந்த கருத்துகளைப் படிக்கலாம்.

இ) நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்.

ஈ) நல்ல புத்தகங்களைத் தேர்ந்து எடுத்து படிக்கலாம்.

உ) நல்ல புத்தகங்களை நாளும் மகிழ்ந்து, உணர்ந்து படிக்கலாம்.

**2. விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)**

அ) மாலையில் அனைவருடன் சேர்ந்து விளையாடுவது நன்று.

ஆ) மாலையில் திடலில் ஓடியாடி விளையாடுவது நன்று.

## பிழை நீக்குக.

பெருந்தலைவர் காமராசர் பள்ளிப்படிப்பை நிரைவு செய்யவிள்ளை எண்ராலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அலவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்கலை நாள்தோறும் படித்தது. எப்போது அரையை விட்டு வெளியே போனாலும் மின்விசிரியை நிருத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிமனிகளைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

**விடை:**

பெருந்தலைவர் காமராசர் பள்ளிப்படிப்பை நிறைவு செய்யவில்லை என்றாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அளவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச்செய்தி இதழ்களை நாள்தோறும் படித்தது, எப்போது அறையைவிட்டு வெளியே போனாலும் மின்விசிறியை நிறுத்த மறப்பதில்லை. வெளியூருக்கு செல்லும்போது தம்முடைய துணிமணிகளைத் தாமே எடுத்து வைத்துக் கொள்வார்.

## கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆகுபெயர்களை அட்டவணைப்படுத்துக.

விமலா கூடத்தில் உள்ள தட்டிலிருந்த டிசம்பரைத் தலையில் சூடிக்கொண்டாள். மல்லிகையைப் படத்திற்குச் சூட்டினாள். அடுப்பிலிருந்து பாலை இறக்கினாள். பின்பு தோட்டத்திற்குச் சென்றாள். விமலாவைப் பார்த்தவுடன் தோட்டம் அமைதியானது! “தலைக்கு இருநூறு கொடுங்கம்மா” என்று தோட்டத்தில் வேலை செய்தவருள் ஒருவர் சொன்னார். வெள்ளை மனங்கொண்ட வேலையாட்களின் கூலியைக் குறைக்க விரும்பாமல் அதனை அவளும்

www.nammakalvi.com



ஏற்றுக்கொண்டாள். அவர்கள் சென்றதும், காலையில் சாப்பிடப் பொங்கல் வைத்தாள். வீட்டில் சமையல் செய்ய, எந்தெந்தப் பொருள்கள் குறைவாக உள்ளன என்பதைப்பற்றிச் சிந்தித்தாள். “சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும். தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்க வேண்டும். துணி உலர்த்துவதற்கு நான்கு மீட்டர் வாங்க வேண்டும்'' எனத் திட்டமிட்டாள். அலைபேசி அழைத்தது. அரை நிமிடம் அலைபேசியில் வந்த வயலின் கேட்டு மகிழ்ந்தாள். பிறகு எடுத்துப் பேசினாள். கடைக்குப் போய்விட்டு வந்த பிறகு. பாதியில் விட்டிருந்த சிவசங்கரியைப் படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாள்.

| | |
|---|---|
| டிசம்பரைத் தலையில் சூடிக் கொண்டாள் | டிசம்பர் என்னும் காலப்பெயர் பூவுக்கு ஆகி வந்ததால் **(காலவாகு பெயர்)** |
| பாலை இறக்கினாள் | பால் கொதித்த பாத்திரத்தை இறக்கினாள். கருவி பாலுக்கு ஆகி வந்தது. **(கருவியாகு பெயர்)** |
| தலைக்கு இருநூறு | ஒவ்வொருவருக்கும் என்பதைத் தலை என்னும் சினைப் பெயரால் உணர்த்துகிறது **(சினையாகு பெயர்)** |
| சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும் | 5 கிலோ அரிசியைக் குறிக்க.... எடுத்து அளந்து தருவது (நிறுத்து) **(எடுத்தலளவை ஆகுபெயர்)** |
| தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்கவேண்டும் | முகந்து அளக்கும் எண்ணெய் **(முகத்தலளவையாகு பெயர்)** |
| துணி உலர்த்த நான்கு மீட்டர் | நீட்டி அளக்கும் துணி உலர்த்தும் கொடியைக் குறிக்கும் **(நீட்டலளவையாகு பெயர்)** |
| சிவசங்கரியை படித்து முடிக்க வேண்டும். | சிவசங்கரி நூலைக் குறிக்கும்.....**(கருத்தாவாகு பெயர்)** |

**பயண அனுபவங்களை விவரிக்க.**

**‘எனது பயணம்’ என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.**

- இந்த ஆண்டு நான் பயணம் மேற்கொண்ட இடம் வயநாடு ஆகும். கேரளாவின் வற்றாத அழகு கொட்டிக்கிடக்கும் பகுதி இது. எங்கு திரும்பினும் பச்சைப் பசேல் தான். கடல் மட்டத்தில் இருந்து 700 முதல் 2100 மீட்டர் உயரத்தில் அமைந்த பகுதி இது. இயற்கை அன்னை ஆட்சி செய்யும் வனப்பு மிக்க பகுதி.
- வயநாடு மாவட்டத்தில் கல்பெற்றா, மானந்தவாடி, வைத்திரி ஆகிய இடங்கள் முக்கியமானவை.
- இவ்விடங்களில் விலங்குகளின் சரணாலயங்கள் உண்டு. துள்ளித் திரியும் மான் கூட்டம், கூட்டம் கூட்டமாய் செல்லும் யானைகள், எங்கோ கேட்கும் பறவைகள் கரையும் ஓசை என மனதுக்கு இன்பம் தரும் இடம் ஆகும்.
- கல்பெற்றாவில் இருந்து சிறிது தூரம் சென்றால் செம்ப்ரா மலை முகடு உள்ளது. இது வயநாட்டின் உயரமான மலை உச்சியாகும். மலை ஏற்றத்துக்கு சிறந்த இடமாகும். கல்பெற்றாவில் இருந்து 15 கல் தொலைவில் கரலாட் ஏரி உள்ளது. இங்கு படகு சவாரி செய்து

www.nammakalvi.com



கொண்டு ஏரியில் தூண்டில் போட்டு மீன் பிடித்து நாங்கள் குழந்தைகளாகி மகிழ்ந்தோம். வயநாட்டின் அழகுக்கு அழகு சேர்க்கும் அருவிகள் பல உண்டு. அவற்றுள் சிப்பாரா அருவி மிகப் புகழ் பெற்றது.

- 100 அடி முதல் 300 அடி உயரத்தில் இருந்து வரிசைத் தொடராகக் கொட்டிக் கொண்டிருக்கும் அருவிகள் கண்களையும், கருத்தையும் கொள்ளை கொள்கின்றன. அருவியின் தடாகத்தில் நீந்தி மகிழ்ந்து புத்துணர்வு பெற்றோம். இங்கு அபூர்வ மூலிகைகள், தங்குவதற்கு மரவீடுகள், இரவில் மிரளச் செய்யும் விலங்குகள் கூட்டம் என நம்மை இன்னொரு உலகுக்கு அழைத்துச் செல்லும். நீங்களும் ஒரு முறை சென்று வரலாமே.
- "இயற்கை ஆட்சி செய்யும் இவ்விடம் அனைவருக்கும் பிடிக்கும்".

## நயம் பாராட்டுக.

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண்கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே! – *வாணிதாசன்*

### முன்னுரை:

தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் உள்ளன. அவை கற்போரின் மனத்தைப் பெரிதும் கவர வல்லன. அந்த வகையில் வாணிதாசன் பாடல் ஒன்றிற்கு அமைந்துள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.

### திரண்ட கருத்து:

வளைந்து செல்லும் கால்வாய்கள் மூலம் ஆறே வயல்வெளியில் புகுந்தாய் மணிபோன்ற கதிர்களை விளையச் செய்தாய். அருகில் உள்ள ஓடைகள் குளங்களை நிறைத்தாய். தாமரை கொட்டி, ஆம்பல் மலர்களின் இதழ்களை விரியச்செய்தாய். சிவந்த கண்களையுடைய கருமையுடைய வரால், வாளை மீன்கள் கரையில் ஓங்கி வளர்ந்த தென்னையில் பாய்ந்து விளையாடுகின்ற நீர் நிறைந்த பெருங்குளங்கள் நிலமெங்கும் நிறையச் செய்து, நிலத்தில் ஒரு வானம் இருப்பதுபோல தோன்றச் செய்கிறாய்.

### மையக்கருத்து:

ஆறு, கால்வாய்கள் நீர்நிலைகளை நிரப்பி, நிலத்தைச் செழிக்க செய்வதோடு நிலத்தில் நிறைந்திருக்கும் நீரிலே வானம் தெரிவதால் பெயரிடைப்பட்ட வானெனத் தோன்றும் என்று இயற்கை வளங்களை மையமாக வைத்துப் பாடியுள்ளார் வாணிதாசன்.

### எதுகை:

செய்யுளில், அடியிலோ, சீரிலோ, இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

www.nammakalvi.com



**சான்று:**

வயலிடை
அயலுள
கயலிடை
பெயரிடை

**மோனை:**

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

**சான்று:**

வயலிடை – வளைந்து
அயலுள – ஆம்பல்
பெயரிடை – பெருங்குளம்

**இயைபு**

செய்யுளில் அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வருவது இயைபுத்தொடை ஆகும்.

**சான்று:**

விளைத்தாய் – விரித்தாய்

**அணிநயம்:**

செய்யுளின் அழகுக்குச் சேர்ப்பது அணியே ஆகும். அணி இல்லாத பாடல் அழகில்லா மங்கை போலும். பெயரிடைப்பட்ட வானெனத் தோன்றும் என்னும் அடியில் உவமை அணி அமைந்து இச்செய்யுளின் அழகுக்கு அழகு சேர்த்துள்ளது.

**சுவை நயம்:**

இப்பாடலைப் படிக்கப் படிக்க, மனத்தில் மகிழ்வு உண்டாவதால் "உவகைச் சுவை" அமைந்துள்ளது.

**முடிவுரை:**

வாணிதாசன் இயற்கைப் புனைவுகளைப் பாடுவதில் வல்லவர். அவரது கவித்திறனுக்கு இப்பாடல் சான்றாக அமைவதோடு, அனைத்து நயங்களையும் பெற்று ஒளிர்கிறது.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 206

**1. புதிர் அவிழ்க்க.**

நான்கெழுத்துக்காரன்
முதல் இரண்டும்
அம்மாவில்
"மா"வைத் தொலைத்து நிற்கும்;
அடுத்த எழுத்தைச் சேர்த்தால்,
வில்லின் துணைவன்;
கடை இரண்டும்
கணக்கில் 'இது' என்பர்.!
முழுதாய்ப் பார்த்தால்
மேகத்திடை தெரிவான்!
– அவன் யார்?

**விடை: *அம்புலி***

www.nammakalvi.com




2. பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க.

**[இன்னோசை, பேரொளி, சிற்றோடை, பேரின்பம், பைங்கிளி, பேரூர், செந்தாமரை]**

மானாமதுரை ஒரு அழகான **பேரூர்.** நீண்டவயல்களும் **சிற்றோடைகளும்** நிறைந்த அவ்ஊரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் **செந்தாமரைப்** பூக்கள் மலர்ந்துள்ளன. கதிரவனின் **பேரொளி** வீசிட சோலைப் **பைங்கிளி**களின் **இன்னோசை** கேட்போரைப் **பேரின்பம்** அடையச் செய்கிறது.

**வட்டத்திற்குள் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக.**




| | | |
|---|---|---|
| கால் | காலை | கான் |
| புத்தகம் | புல் | புத்தி |
| அகல் | அவல் | கல் |
| அதிகம் | கறி | தறி |
| புதன் | வலை | அறிவன் |
| கலை | கத்தி | கவலை |
| காவல் | அலை | தில்லை |

3. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.



மலை யெனவும் (குறிஞ்சி)
முல்லைவனம் எனவும்
மருத நிலமாம் வயல் எனவும்
நெய்தலாம் கடலும்
பாலையாம் வெயிலும் என உன்
நிலத்தைப் பிரித்தாய்
முல்லைச்சரங்கள் தொடுக்கும்
கரங்கள் ஆடல் கலைகளையும் நடத்தும்
முல்லையும் கொட்டியும் ஆம்பலும்
இசை முழங்கி பாடும்
நீர் நிறை கரைகளில்
வளர் மரங்களில்
பைங்கிளியும் மணிப்புறாவும் மனம்
மயக்கும் தம் இசையால்
சிறுபானை தொடங்கி உயர்
கோபுரம் வரை மின்னும் கலைவண்ணம்
இப்பாடல் உணர்த்தும் தமிழ்
கலாச்சாரத்தை மக்கள்
மறவாமல் இருந்தால் போதும்

www.nammakalvi.com



## செயல்திட்டம்

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களின் வரவு செலவு பட்டியலை உருவாக்குக.

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப்பொருட்கள் இவ்வார வரவு = ₹ 2000/-

| பொருள்கள் | கிலோ | ₹ |
|---|---|---|
| அரிசி | 5 கிலோ | 200.00 |
| து.பருப்பு | ½ கிலோ | 45.00 |
| உ.பருப்பு | ½ கிலோ | 50.00 |
| சர்க்கரை | ½ கிலோ | 25.00 |
| டீத்தூள் | 100 கிராம் | 55.00 |
| மிளகு | 50 கிராம் | 40.00 |
| சீரகம் | 50 கிராம் | 25.00 |
| வெந்தயம் | 50 கிராம் | 20.00 |
| பால் | 4 லிட்டர் | 160.00 |
| எண்ணெய் | ½ லிட்டர் | 60.00 |
| ரவை | ½ கிலோ | 25.00 |
| சலவைத்தூள் | ¼ கிலோ | 40.00 |
| காய்கறி வகைகள் தேங்காய் | | 200.00 |
| பழங்கள் | | 300.00 |

மொத்த செலவு - ₹ 1245.00
வரவு - ₹ 2000.00
செலவு - ₹ 1245.00
மீதத் தொகை ₹ 755.00

### அகராதியில் காண்க.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| ஈகை | – | கொடை, பொன், கற்பகமரம், காடை, காற்று, மேகம், கொடுத்தல். |
| குறும்பு | – | குறுநில மன்னர், பாலை நில ஊர், பகைவர், குறும்புத்தனம். |
| கோன் | – | அரசன், தலைவன் இடையர்பட்டப் பெயர். |
| புகல் | – | புகுகை, தஞ்சம், செல், விருப்பம், வெற்றி, புகழ், போக்கு. |
| மொய்ம்பு | – | தோள், வலிமை. |

www.nammakalvi.com



## நிற்க அதற்குத்தக...

**சமூகத்திற்கு எனது பணிகள்**

**அ) குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும்.**

**ஆ) தண்ணீர் வீணாவதை எங்கு கண்டாலும் தடுப்பேன்.**

**இ) என்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வேன்.**

ஈ) மழைநீர் சேகரிப்பின் இன்றியமையாமையை வலியுறுத்துவேன்.

உ) பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவேன்.

ஊ) இயற்கையைப் பேணிப் பாதுகாக்க மரங்களை நடுவேன்.

எ) சாலை விதிகளைப் பின்பற்றுவேன். பிறரையும் பின்பற்ற செய்வேன்.

ஏ) நம் கலைகளையும் பண்பாட்டையும் பேணிக்காக்க என்னால் இயன்றதைச் செய்வேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| இந்திய தேசிய இராணுவம் | - Indian National Army |
| பண்டமாற்றுமுறை | - Commodity Exchange |
| காய்கறி வடிசாறு | - Vegetable Soup |
| செவ்வியல் இலக்கியம் | - Classical Literature |
| கரும்புச் சாறு | - Sugarcane Juice |

※※⁂⁂⁂※※